
# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 34 ] ஆனந்த ஆண்டு கார்த்திகைத் திங்கள் 10—12—74 [ இதழ்

திருவாதிரைத் திருநாள்

29—12—'74 ஞாயிற்றுக்கிழமை



திருவாதிரை நாளில் தில்லைப் பெருங்கூத்தன்
அருள்நடனம் போற்றி அல்லலறுத் தின்புறுவோம்.

தருமையாதீனக்குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# " ஞானசம்பந்தம் "


தருமையாதீனத் திங்கள் இதழ்

| மலர் 34 | 10-12-74 | இதழ் 1 |
|---|---|---|


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஆனந்தக் கூத்தன் அருள் வழிபாடு | 1 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய ஆசியுரை ... | 7 |
| 3 | வருண ஜபம் ... | 14 |
| 4 | திருத்தொண்டத் தொகைத் திறன் ... | 17 |
| 5 | சமயச் சடங்குகளும் டி. கே. சியும் ... | 22 |
| 6 | " வாழ் முதல் " ... | 26 |
| 7 | கடிதம் ... | 32 |
| 8 | செய்திகள் ... | 33 |
| 9 | எதிர்காலம் ... | 40 |
| 10 | " ஞானசம்பந்தம் " முப்பத்துமூன்றாம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம் ... | i |


உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

எல்லாம் உனது செயலென்
றறிந்தும் என துளத்தில்
பொல்லாத சங்கற்பம் ஏன்வரு
மோபுர மூன்றெரிக்க
வல்லாய் கமலையின் ஞானப்ர
காச வரதஇது
சொல்லாய் கரண மயக்கமன்
றோஎன் தொழிலல்லவே.

— தனிப் பாடல்கள் 3


ஆசிரியர் :

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | ஆனந்த – கார்த்திகை – 10—12—74 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஆனந்தக் கூத்தன் அருள் வழிபாடு

### தத்துவ நூல்களும் ஆழ்ந்த சிந்தனையும் :

உலகில் வாழும் உயிர்கள் எல்லாம் ஆறு நிலைகளில் அறிவு பெற்று விளங்குகின்றன. ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் ஈறாக உள்ளவற்றினும் சிறப்பாக ஆறறிவுயிராகிய மனிதன் சிந்திக்கும் திறனைப் பெற்று விளங்குகின்றான். மனத்தைப்பெற்று மனிதன் என்ற பெயர்க்குரிய மாண்புடையவனாகத் திகழ்கின்றான். மற்ற உயிர்கட்கில்லாத இந்த மாபெருஞ் சிந்தனைத்திறனால் சிந்தித்துச் சிந்தித்து உயர்கின்றான்; ஆம்; மனித நிலையினின்றும் தெய்வ நிலைக்கும் உயர்ந்துவிடுகின்றான். நான் யார்? நான் என்பது உடலா? உயிரா? அல்லது உடலும் உயிரும் நீங்கிய வேறொன்றா? என்னைப் படைத்தது யார்? நான் இயற்கையில் தோன்றியவனா? அல்லது செயற்கையில் விளைந்தவனா? என்றெல்லாம் மனிதன் சிந்தித்த தூய சிந்தனையின் விளைவையே சமயம் என்கின்றோம். இவற்றைப்பற்றி விரிவாகப் பேசும் நூல்களைத் தத்துவ நூல்கள்

அல்லது மெய்ப்பொருள் நூல்கள் என்கின்றோம். ஆகவே தத்துவ ஆராய்ச்சி ஆழ்ந்த சிந்தனையின் விளைவே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

## சங்ககாலச் சிவநெறி மாண்பு :

தமிழகத்தைப் பொறுத்தவரை தத்துவச் சிந்தனை அல்லது சமயவழிப்பட்ட தெளிவியல் தோன்றிய காலத்தை அறுதியிட்டுரைக்கவியலாது. சங்ககாலத்தை ஓரளவு வரலாற்றாசிரியர்கள் வரையறை செய்துள்ளார்கள். அக்காலத்தேயே சமயநம்பிக்கை, சிந்தனை தமிழகத்தில் நிலைபெற்றுச் செழித்திருந்தது. விழாக்கள் கொண்டாடினர். சிவபிரானையும், திருமாலையும், முருகனையும் வழிபட்டனர்; நோன்புகள் நோற்றனர்; திருக்கோயில்களில் வழிபாடு செய்தனர். ஆடவரும் பெண்டிருமாகச் சென்று வரங்கிடந்தனர். திருக்கார்த்திகை விழா, திருவாதிரை விழா, தைவிழா முதலிய விழாக்கள் கொண்டாடப்பட்டன. சிவபிரானை "ஆதிரை முதல்வன்" என்று கூறிப் போற்றினர். மார்கழி விழா என்ற பெயருடன் திருவாதிரை விழாக் கொண்டாடப் பட்டது. இவற்றிற்கான இலக்கியச் சான்றுகளைச் சங்கநூல் களிற் காணலாம். இறையனார், உருத்திரன், சத்திநாதன், பெருந்தேவன், பேரெயின் முறுவலார், வெண்பூதி முதலிய சிவபிரானைக் குறிக்கும் பெயர்களைத் தங்கள் மக்கட்கு இட்டு வழங்கிப் பெருமகிழ்வு எய்தியிருந்தனர் அக்காலத் தமிழ்மாந்தர். 'மகாதேவன்' என்னும் பெயர்ப்பொருளை உடையது 'பெருந் தேவன்' என்பது; முப்புரம் எரித்த முதல்வனின் சிரிப்பை நினைவுபடுத்துவது 'பேரெயின் முறுவலார்' என்பது. இவ்வாறே 'திருநீற்றை அணிந்த திருமேனியினன்' என்ற பெயர்ப் பொருளை உடையது 'வெண்பூதி' என்னும் திருப்பெயர். பெருந்தேவன் என்னும் பெயருக்கேற்பச் சிலப்பதிகாரம், மணி மேகலை முதலிய நூல்களில் சிவபிரான் திருக்கோயிலே முதலிடம் தரப்பெற்று மொழியப்பட்டிருக்கின்றமை காணலாம்.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்"

"நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்"

என்பர் சமணத் துறவியாராகிய இளங்கோவடிகளார். பௌத்த மதத்தினரான சாத்தனாரோ,

" நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துப் பூதம் ஈருக "

என்று பாடுவார். புறச்சமயத்தாராகிய இப்பெரும் புலவர்கள் இவ்வாறு சிவபிரானுக்கு முதலிடம் தந்து பாடியிருத்தலைக் கூர்ந்து நோக்கின், சிலப்பதிகார மணிமேகலை காலத்தில், சைவ சமயம் பெற்றிருந்த முதன்மை இனிது அறியப்படும். இவ்விரு பெரும் புலவர்கள் கருத்தைப் பத்துப் பாட்டுள் ஒன்ருகிய மதுரைக் காஞ்சியும்,

" நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனுக "

என்ற வரிகளில் ஆதரிப்பதை அறிவுடையுலகம் இனிதறியும்.

## திருவாதிரைத் திருவிழாத் திறன் :

திருவாதிரைத் திருவிழா சிவபிரானுக்கு உரிய திருவிழா; ஆதலின் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாதிரைத் திருப்பதிகம் ஒன்றையே அருளியுள்ளார்கள். "முத்துவிதானம் மணிப் பொற்கவரி" என்னும் தொடக்கம் உடைய அவ்வருட் பதிகம் திருவாரூர்த் தலத்தின் மாண்பை எடுத்துரைக்கும் குறிஞ்சிப் பண் பொதிந்த திருப்பதிகம் ஆகும். 'வீதிகள் தோறும் வெண் கொடியோடு விதானங்கள் சோதிகள் விட்டுச் சுடர்மாமணிகள் ஒளி தோன்றும்' என்றும், 'சங்கும் பறையும் ஆர்ப்பப் பலரும் இட்ட கல்லவடங்கள்' ஒலிக்கும் என்றும், அப்பரடிகள் ஆரூரில் ஆதிரை நாளின் வண்ணத்தை அருளிச்செய்துள்ளார். இத் திருவிழா நிகழும் தெய்வத் திங்களே மார்கழி. இம்மார்கழி ஆண்டுதோறும் வருகின்றது; திருவெம்பாவை, திருப்பாவை நெறிகளை நினைந்து உருகுதற்பொருட்டு, அந்நெறிநின்று பயன்தலைப்படும் அருட்டிங்களே மார்கழி என்பர்.

## ஆனந்தக் கூத்தனின் ஐந்தொழில் அருளாடல் :

ஆனந்தக் கூத்தனின் அடிமலர்களைப் போற்றிப் பரவும் தமிழ்மக்கள் திருவாதிரைத்திருநாளில் களி உண்டு அருட்களிப் பெய்துவர். தில்லைத் திருக்கூத்தனின் அருளாடல் உலகெலாம் வாழ்விக்கும் என்று பழந்தமிழ் மாந்தர் இனிது உணர்ந்திருந் தனர். அதனுடன் அப்பெருமானின் தாண்டவம் ஐந்தொழில் புரியும் அற்புத நடனம் என்றும் உணர்ந்திருந்தனர். பொன்னம் பலத்தில் பெருமான் ஆடுகின்ற தோற்றத்திலே ஐந்தொழிலும் விளங்குகின்றன. எப்படி ?

" தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு "

என்று உண்மை விளக்கம் பாடுகின்றது. உடுக்கை - படைத்தலையும், அபயத் திருக்கரம் - காத்தலையும், நெருப்பு - அழித்தலையும், ஊன்றிய திருப்பாதம் - மறைத்தலையும், தூக்கிய திருவடி - அருளலையும் குறிக்கின்றன என்பது திருவதிகை மனவாசகம் கடந்தார் கருத்து. அதுமட்டுமோ? நடராசப் பெருமான் திருநடனம் உணர்த்தும் உண்மை யாது? மாயைப் பாசத்தை உதறுவித்து, வல்வினைப் பாசத்தைச் சுட்டொழித்து, ஆணவ வலியின் வன்மையை அறவே ஒழியும்படிச்செய்து, திருவருளையே உயிர்க்கு ஆதாரம் ஆக்கி, ஆனந்தத்திலே உயிரை அழுத்தும் நிலையே இறைவன் நடனம் என்கின்ருர் அவ்வருளாசிரியர். அவ்வழகிய திருப்பாட்டு உணர்ந்தோதற்குரியது ;

" மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டு,மலம்
சாய அமுக்கி அருள்தானெடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானமுத்தல்
தான்எந்தை யார்பரதம் தான் "

## திருவைந்தெழுத்து விளக்கம் :

திருவைந்தெழுத்தே ஆனந்தத் திருக்கூத்தில் விளங்குகின்றது. கூத்தப்பிரானின் திருவடியில் நகரம்; உந்தியில் மகரம்; திருத்தோள்களில் சிகரம்; திருமுகத்தில் வகரம்; திருமுடியில் யகரம். உடுக்கு ஒலிக்கும் திருக்கையிலே சிகரமும், வீசுந்திருக்கையிலே வகரமும், அபயத் திருக்கையிலே யகரமும், நெருப்பேந்திய திருக்கையிலே நகரமும், முயலகனை மிதித்த திருவடியிலே மகரமும் உள்ளன என்றும் கூறுவது ஒருமுறை. இந்த இருநிலைகளிலும் பெருமானின் ஊன நாடகம், ஞான நாடகம் இரண்டும் விளக்குகின்றன ஆதலின் உண்மை விளக்கம் இவற்றையும் உரைக்கின்றது ;

" ஆடும் படிகேள் நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லே நகரம் — கூடும்
மகரம் உதரம் ; வளர்தோள் சிகரம்
பகரு முகம்வா முடியப் பார் "

" சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் — பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் ; அடிக்கீழ் முயலகனுர்
தங்கு மகரமது தான் ".

இவ்வாறு, "சிவாயநம என்னும் திருவெழுத்து அஞ்சாலே அவாமா மற நின்றுடுவான்" என்று நடராசப் பெருமானின் திருக்கூத்து நுட்பத்தை உண்மை விளக்கம் விளக்கியுள்ளது.

### வழிபாட்டின் பயன் :

நடராசப் பெருமானை நினைந்து வழிபடும், திருவாதிரைத் திருநாளில், இந்தத் தத்துவ விளக்கத்துடன் மனமுருகி வழிபடுதல் அன்புலகின் கடமையாகும். இத்தகைய வழிபாடு நாட்டில் நன்மை விளைப்பதுடன், நன்கு பருவமழை பொழிந்து நாடுசெழிப்பதற்கும் அடிப்படையாகும் என்பது உறுதி. எல்லாம் வல்ல பெருமானின் ஐந்தொழில்களுள் ஒன்றே மறைத்தல் என்பது; அதினின்று மீட்டு அருளாலும் அவன் திருவடியே தர வல்லது என்பது துணிவு. ஆதலின் மன மொழி மெய்களாலாகிய வழிபாடு ஒன்றே இந்நிலையில் நாட்டில் நன்னிலை காட்ட வல்லது என்பதை உலகம் உணர்ந்து தெளிவுறுமாக!

## "ஞானசம்பந்தம" புத்தாண்டு

"ஞானசம்பந்தம்" இதழ் வளர்ந்துவருகின்றது; புத்தாண்டு தொடங்குகின்றது. முப்பத்து மூன்றாண்டுகள் நிறைவெய்தி, முப்பத்து நான்காவதாண்டு தொடங்குகின்றது. சமயப்பணி புரியும் தெய்விக இதழாக – தமிழ் மணம் பரப்பும் அமுத இதழாக மலர்ந்து வரும் "ஞானசம்பந்தத்தின்" பணிகளைத் தமிழகம் மட்டுமின்றி அயல்நாடுகளிலுள்ள தமிழ்கூறு நல்உலகமும் நன்கு அறியும்; சந்தாதாரர்கள் பெருகிவருவது இதனைத் தெளிவாக்குகின்றது; ஆயுட்சந்தாதாரர்களும் பெருகிவருகின்றார்கள்: ஆம்; உயிர்த்துணையாக உள்ள பரம்பொருளின் திருவருட் செய்திகளைக் கட்டுரைகளாக, குருமணியவர்களது அருளாசிகளாக, காலந்தோறும் வெளியிட்டுவரும் இவ்விதழ் தம்முடைய ஆயுட் காலம் முழுமையும் தக்க அறிவியல் துணையாக இருத்தல் வேண்டும் என்று கற்றறிந்த கனிவுடையன்பர்கள் கருதுவது உண்மைதானே!

இவ்விதழைப் புரந்தருளும் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது திருவடி மலர்கட்கு இப் புதிய ஆண்டின் தொடக்கத்தில் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர்களது அருளாசியுடன் புதிய ஆண்டிலும் தன் முன் உள்ள அரும்பெருங்கடமைகளைப் புதிய உற்சாகத்துடன் செய்ய உறுதியெடுத்துக்கொண்டு தன் பணியைத் தொடர்கின்றோம்.

காகித விலை உயர்வு முதலிய அடிப்படைக் காரணங்களால் இவ்விதழின் கட்டணத் தொகையில் ஒரு சிறு மாற்றம் செய்ய நேர்ந்துள்ளது. ஞானசம்பந்தம் அடக்க விலை ஆண்டொன்றிற்கு எட்டு ரூபாய் ஆகின்றது. சமயப் பிரசாரத்தை நோக்கமாகக்கொண்ட இதழாக இருத்தலால் ஆண்டுச் சந்தாவை அடக்க விலைக்கும் குறைவாக ஆறு ரூபாய் ஆகவும், தனியிதழ் எழுபத்தைந்து காசாகவும் இனி அமைக்க நேர்ந்துள்ளது. "ஞானசம்பந்தம்" இதழின் வாசக நேயர்கள் இதனைத் தம் இயல்பான அன்பால் ஏற்றுக்கொள்வதுடன், பழக்கம்போல் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து உதவுவார்கள் என்றும் நம்புகின்றோம்.

கட்டுரை கவிதை முதலிய பல்வேறு எழுத்து ஓவியங்களைத் தந்துதவும் அறிஞர் பெருமக்கட்கு எம் நன்றிகள். ஒவ்வோரிதழும் நம் குருமாமணியவர்கள் திருவாய் மலர்ந்த திருவருட் செய்தியுடன் வருவது நம் நல்வினைப்பேறு. இதன்பொருட்டு அன்புலகின் சார்பில் நம் வணக்கங்களை அவர்கள் திருவடி மலர்களில் காணிக்கையாக்குகின்றோம்.

வாழ்க ஞானசம்பந்தம்!

---

திருநெல்வேலி, தருமையாதீன மடாலயத்தில்

## இலக்கியச் சோலை விருந்து

திருநெல்வேலி, தருமையாதீன மடாலயத்தில், தருமையருள் பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தின் சார்பில் ஞாயிற்றுக் கிழமை தோறும், செவிக்குணவாக இலக்கியச் சோலை விருந்து என்ற தலைப்பில், இராமாயணம், கந்தபுராணம் ஆகிய நூல்கள் பற்றிய விரிவுரைகளும், நூலரங்கேற்றமும் 1—12—74 முதல் தொடங்கி நடைபெறுகின்றன. சித்தாந்தத்தென்றல், திரு. மு. சுந்தரவிநாயகம், சிவமணி, புலவர். திரு ம. சிவசம்பு, புலவர். திருமதி. ந. பாலாம்பாள் கவிஞர், திரு. தி. சு. ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரையாற்றுகின்றனர். கவிஞர். திரு. தி. சு. ஆறுமுகம் அவர்கள் 'திருவருமாமலைச்சிலேடைவெண்பா' தனிப்பாடல் தொடருரை நிகழ்த்துவார்கள். இந்நிகழ்ச்சி, 2—3—75 இல் நிறைவுபெறும். திரு. இராம. கனகசபாபதி அவர்கள் நெல்லை அருணகிரி இசைக் கழகத்தின் அமைச்சராகவும் புலவர் திரு. ம. சிவசம்பு அவர்கள் விரிவுரைப்பொறுப்பாளராகவும் இருந்து நிகழ்ச்சிகளை உடனிருந்து நடத்துகின்றனர். அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெறுவார்களாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை
திருக்கோயிலில் நிகழ்ந்த

இருபத்துநான்காவது சதசண்டி வேள்வி நிறைவில்

திருவாய் மலர்ந்தருளிய

# ஆசியுரை

25—10—1974

### வெற்றிக்குரிய நாள் :

இன்று விஜயதசமி. இந்நாளில் எந்தக்காரியத்தைத் தொடங்கினாலும் வெற்றியடையலாம். விஜயதசமி வெற்றிக்குரிய நாளானதால் இன்று நாள் பார்க்காமலேயே - நாளும் கோள்களும் நலிந்திருந்தாலும்கூடக்கேடில்லை என்று எல்லாக்காரியங்களையும் தொடங்குவார்கள். பஞ்சபாண்டவர்கள் வனவாசத் திற்குச் செல்லும்போது தமது ஆயுதங்களை ஒரு வன்னி மரப் பொந்தில் வைத்துவிட்டுப்போனதாகவும், பின்னர் திரும்பிவந்து அவற்றை அவர்களுள் விஜயனென்னும் அர்ச்சுனன் பூசித்து எடுத்துக்கொண்டதாகவும், பத்தாவது நாள் பேசப்படுவதால் அந்நாளை விஜயதசமி என்று கொண்டாடுகின்றனர். திருக் கோயில்களில் வன்னி மரத்தடியில் அம்பாள் எழுந்தருளி அம்பு போடுவது இவ்வுண்மையை வலியுறுத்தும். விஜயதசமியாகிய இன்று அம்பாளை வழிபட்டுத் தொடங்கும் காரியம் வெற்றிபெறும் என்று எண்ணியே, சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். தொழில்களையும் செய்யத் தொடங்குகின்றனர்.

### தை பிறந்தால் :

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று கூறுவதன் தத்துவம் என்ன? மார்கழி மாதம் முழுவதும் இறைவனை வழிபடுகிறோம்:

அதன் பயனாகத் தை மாதத்தில் நல்ல வழி பிறக்கிறது. மார்கழி மாதம் முழுவதும் கடவுளைப் பூசித்துத் தை மாதத்தில் ஒரு காரியத்தைத் தொடங்கினால் அது எவ்வகை இடையூறுமின்றி வெற்றி பெறும். எனவேதான் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்றனர் நமது முன்னோர்கள். அதுபோலவே காலையில் எழுந்து இறைவனை வழிபட்டவுடன் தொடங்கும் காரியங்களும் நல்லனவாகவே நடக்கும்.

## நவராத்திரி வழிபாடு :

நாம் எல்லா ஆற்றல்களும் ஒருங்கே அமைந்த உலக மாதாவாகிய அம்பாளை இந்நவராத்திரி நாட்களில் வழிபடுகிறோம். சாக்த வழிபாட்டில் எல்லாவற்றிற்கும் மேலாக – பரம்பொருளாக அம்பிகையையே வழிபடுகின்றனர். தேவீ மாகாத்மியத்தில் கூறுவனவற்றை உற்று நோக்கினால் ஓர் உண்மை புலனாகும். மணித்தீபத்தில் இராஜராஜேசுவரியாக எல்லாத் தேவர்களும் புடைசூழ வீற்றிருக்கும் அம்பாளைப் பார்த்து, 'ஆண்டவனோடு நீ வீற்றிருந்தால் உன் தோற்றம் மேலும் பொலிவுபெறும். உன் ஆட்சி வலுப்பெறும்' என்று பிரமதேவன் கூறியதாகக் காணப்படுகிறது.

அம்பாள் ஆண்டவனோடு இருத்தலே சாஸ்திரங்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இது உலகியலுக்கும் ஒத்து இருக்கிறது. பிள்ளைகள் தாயாரைப்பார்த்துத் தமக்குவேண்டியவற்றைக் கூறி தாய்மூலமாகத் தந்தையிடம் பயனைப் பெறுகின்றனர். உயிர்கள் அனைத்தும் அம்பிகையை நோக்கியே தவம் (விரதம்) இருந்து பயன்பெறுகின்றனர். அம்பிகையோ தனக்கு வேண்டும் வரங்களை, இறைவனை நோக்கித் தவம் இருந்து வழிபட்டுப் பெறுகின்றாள் அதுபோன்று ஒவ்வொரு குடும்பத் தலைவியும் தலைவனை வணங்கவேண்டும் ஆனால் இன்று மனைவியும் பிள்ளையும் சேர்ந்துகொண்டு குடும்பத் தலைவனிடம் சண்டை போடுகிறார்கள். தன் கணவனைத்தவிர பிற ஆண்மக்களைப் பெண்கள் புகழக்கூடாது. கணவனுக்கு அடங்கி மனைவி நடந்தால்தான் பிள்ளைகளும் பெற்றோர்களுக்கு அடங்கி நடப்பர். பெற்றோர்கள் சொல்வதைப் பிள்ளைகள் கேட்கவேண்டும். பெற்றோர்கள் கோபித்தால்கூட அதுவும் நம் நன்மைக்குத்தான் என்று பிள்ளைகள் உணர்ந்து பொறுமையாக இருக்கவேண்டும். எனவே குடும்பத்தலைவனிடம் தலைவி வணங்கி நடக்கவேண்டும். தலைவன் தலைவியாகிய பெற்றோர்களிடம் பிள்ளைகள் வணங்கி நடக்கவேண்டும். இந்த நல்ல பண்பு ஒவ்வொரு வீட்டிலும் வளர்ந்தால் நாட்டிலும் நல்ல பண்பு மலரும்.

## இறைவனின் குணங்கள் :

முன் அறிமுகமில்லாத எங்கோயிருந்த ஒரு பெண்ணும் எங்கோயிருந்த ஓர் ஆண் மகனும் திருமணம் செய்துகொள்கின்றனர். ஒருசில ஆண்டுகளில் கணவன் குண நலங்கள் மனைவிக்கும் மனைவியின் குண நலங்கள் கணவனுக்கும் படிந்துவிடுவதைக் காண்கின்றோம். அதேபோன்று பெற்றோரை யே வணங்கி வழிபட்டுவரும் பிள்ளைகளுக்கும் அப்பெற்றோர்கள் குண நலங்களே அமைந்து விடுகின்றன தலைவன் குணம் தலைவிக்கும், தலைவிகுணம் தலைவனுக்கும், பெற்றோர்கள் குணம் பிள்ளைகளுக்கும் அமையும்போது இறைவனின் குணங்கள் ஏன் நமக்கு அமையாது? இறைவனை எண் குணத்தான் என்கிறோம். இறைவனுடைய அந்த எட்டுக் குணங்களையும் எப்பொழுதும் எண்ணி நாம் அவனை வழிபட்டுவந்தால் இறைவனின் குணங்கள் நமக்குப்படியும்.

## எது இன்பம் ?

உலகில் எல்லோரும் இன்பத்தையே வரவேற்கின்றனர். துன்பத்தை யாரும் விரும்புவதுமில்லை. வரவேற்பதுமில்லை. துன்பமாவது யாது? இன்பம் என்றால் என்ன? என்பவற்றைப் பற்றித் திருவள்ளுவர் அழகாக விளக்குகின்றார்,

" இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண் "

வினையாவது செயல், ஒவ்வொருமனிதனும் தான், சுகமாகவாழவே விரும்புகின்றான். தான் சுகமாக வாழ்வதற்கு நாட்டு மக்களை - உற்றார் உறவினர்களைப் பாதுகாக்க வேண்டும் அவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்யவேண்டும் அவர்களுக்கு உழைத்துப் பணிசெய்தலையே முக்கியமான செயலாகக் கொள்ள வேண்டும். இப்படி வாழ்பவன் தன் உறவினரின் துன்பம் துடைக்கும் தூணாக விளங்குவதுடன் தானும் துன்பம் நீங்கி இன்புறுபவனாகிறான்.

## இன்பத் துன்பப் பயன் :

இன்பம் வரும்போது அறிவு மயங்குகிறது ; துன்பம் வரும் போது அறிவு வளர்கிறது ; தெளிவடைகிறது வந்த துன்பத்தை எப்படிப் போக்குவது என்றெல்லாம் அறிவு சிந்திக்கவும் செயலாற்றவும் செய்கிறது. எனவே இன்பம் வரும்போது

அறிவு வேலை செய்யாது மயங்கும். ஆனால் துன்பம் வரும்போது தான் அறிவு வேலைசெய்யும்; வளரும்; தெளிவடையும். எனவே துன்பத்தை வரப்பிரசாதமாக வரவேற்கும் மனப்பக்குவம் வர வேண்டும்.

இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அவரவர் மனநிலையே காரணம். ஒருசிலர் துன்பத்தைத் துன்பமாகவே நினைக்கின்றனர்; நிச்சயிக்கின்றனர். வேறுசிலர் மாறுகக்கருதுகின்றனர்; துன்பத்தையும் முன்னைவினைக்கேற்ப இயல்பாகவருவது என்று கருதுகின்றனர். இவ்வாறு எண்ணுவதற்கு அவரவரது தகுதி வேறுபாடே காரணமாகும்.

“ இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன் ”

இன்பத்தை விரும்பாமல் தனக்கு வரும் துன்பத்தையும் துன்பமாகக் கருதாமல் இயல்பானது என்று கருதுபவன் எந்தக் காலத்திலும் - எந்தப்பிறவியிலும் துன்பம் அடைதல் இல்லை. துன்பத்தைத் தாங்கிக்கொள்வதும் துன்பம் தருகிறவர்களைப் பொறுத்தலும்தான் தவம்.

தவம் என்றால் என்ன ?

தவம் என்றால் என்ன ? ஒரு சில லட்சியங்களை - உயரிய குறிக்கோள்களை மேற்கொண்டு அவரவரும் தம் வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடிப்பேன் என்று உறுதி எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதுதான் தவம். உறுதி எடுத்துக்கொண்டவற்றைக் கைவிடாமல் காப்பது விரதம். தாம் மேற்கொண்ட நற்செயல்களைக் கடைப்பிடிப்பதில் எந்த இடையூறுகள்வந்தாலும் மேற்கொண்டவற்றை விடாமல் காக்கவேண்டும்.

“ தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு ”

தங்கருமஞ் செய்பவர்களைத் தவஞ்செய்பவர் என்று திருவள்ளுவரும் கூறுகின்றார்.

‘ காப்பது விரதம் ’ என்று நாட்டில் வழங்கிவருகின்றது. அதனை உயரிய நிலையில் சொல்லும் போது தவம் என்றும் நோன்பு என்றும் கூறுவர். தவத்தை மேற்கொண்டபோது வருகின்ற துன்பங்களைப் பொறுமையோடு பொறுத்துக் கொள்ள

வேண்டும். பிற உயிருக்குத் துன்பம் செய்யாதிருத்தல்வேண்டும். இவ்விரண்டுமே தவத்திற்கு உரு என்கிறார் திருவள்ளுவர்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

துன்பத்தைத் தாங்கும் சக்தி :

நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் உப்பில்லாமல் உணவு உண்பது விரத விதியில் சிறப்பாகக் கூறப்படுகிறது. இவ்விரதத்தைப் பார்க்கிறபோது உடல் நலம் விளைவது நன்கு தெரிகிறது. இம்மாதிரி விரதங்களைச் சரியாக அவ்வக்காலத்தில் கடைப்பிடிக்காததால் நோய்கள் நம்மை நாடிவருகின்றன. நோய்கள் தாக்காது இருப்பதற்கே நமது முன்னோர்கள் இம்மாதிரி விரதங்களைப் பெரும்பாலும் மழைக்காலத்திலும், பனிக்காலத்திலும் அமைத்து இருக்கிறார்கள். உணவைக் குறைப்பதற்கே உப்பில்லாமல் சாப்பிடுவதை வற்புறுத்தியுள்ளனர். இதை உடல் வளத்திற்கும் - நலத்திற்கும் பயனுள்ளதாக மருத்துவநூலார் குறிப்பிடுகின்றனர். பகுத்தறிவு படைத்த மனித இனம் தம்மைத்தாமே கட்டுப்படுத்தி விரதங்காத்து தமக்கும் நாட்டிற்கும் வளங்களைத் தேடிக்கொள்ளக் கடமைப் பட்டது. கட்டுப்படுத்தாமல் இருப்பவர்க்கு நோய் முதலிய துன்பத்தைக் கொடுத்து உடல்வளத்தையும் இழக்கச்செய்கிறான் இறைவன். அனுபவித்தே ஆகவேண்டும் என்று எண்ணிச் செயல்களைச் செய்யாமல், தம்மைக் கட்டுப்படுத்தி வாழத் தெரிந்தவர்களுக்கு நோய் முதலியவற்றைக் குறைத்து வளமுடன் வாழச் செய்கிறான் இறைவன். ஆதலால் அறிவுடைய மக்கள் இத்தகைய விரதங்களைத் தாமே மேற்கொண்டு நலமுடன் வாழவேண்டும். நாம் செய்த வினைகளுக்கு ஏற்பவரும் துன்பத்தை நாமே ஏற்று அனுபவிக்கவேண்டும் என்று எண்ணித் தயாராகிவிட்டால் அத்துன்பம் பாதியாகக் குறைந்துவிடும். ஒருவரது உடலில் வேனில்கட்டி அல்லது விரல்சுத்திவந்து உடையாமல் வேதனை கொடுத்துக்கொண்டிருக்கிறது. அவ்வேதனை பகலில் குறைவாகவும், இரவில் அதிகமாகவும் தெரிகிறது. பகலில் பலரோடு பேசிக்கொண்டும் வேடிக்கை முதலியவற்றைப் பார்த்துக்கொண்டும் இருப்பதால் குறைவதாகத்தெரிகிறது. ஆனால் இரவில் யாரும் துணை இருப்பதில்லை. பேசிக்கொண்டிருக்கவோ, வேடிக்கை பார்ப்பதற்கோ வழியில்லை. அதனால் இரவில் வலி அதிகமாகத்தெரிகிறது. பகலில் வலி குறைவாகத் தெரிவதற்கும்

இரவில் வலி அதிகமாகத் தெரிவதற்கும் அவரவர் மனநிலையே காரணமாகும். வலியின் உணர்வு பகலில் குறைகிறது ; அதனால் துன்பத்தை முழுமையாக அனுபவிக்கவில்லை. இரவில் வலியின் உணர்வு அதிகமாகத்தெரிவதால் துன்பத்தை முழுமையாக அனுபவிக்கநேரிடுகிறது அதைப்போல விரதங்காத்தல் முதலிய வற்றை மேற்கொள்பவருக்குத் துன்பத்தைத் தாங்கும் சக்தியைத் தருகிறான் இறைவன். அதனால் விரதங்காத்தல் முதலியன அவர்களுக்குத் துன்பமாகத்தெரிவதில்லை. மற்றவர்களுக்குத் துன்பமாகத்தெரிகிறது.

## இறையருள் :

வைத்தீசுவரன்கோயிலில் தங்கக்கலசம் திருட்டுப்போயிற்று. பின் பிடிபட்டுவிட்டது. ஒரு தவறு செய்துவிட்டு அதிகாரிகளை வேண்டுமானால் ஏமாற்றிவிடலாம். ஆனால் கடவுளை ஏமாற்ற முடியாது தவறு செய்தவர்கள் தப்பிவிடமுடியாது. இறைவன் திருவுள்ளப்படி எல்லாம் நிகழுகின்றன. அண்மையில் இத் திருக்கோயிலில் நிகழ்ந்த தீ விபத்தை நாம் இறையருளால் நிகழ்ந்தது என்றே நம்புகின்றோம். தெய்வத்திடம் பக்திகொண்ட சான்றோர்கள் மனந்தளராமல் இறையருள் என்றே எண்ணுவர். சாதாரண மனிதர்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு இதுவேயாகும்.

## எல்லாம் நன்மைக்கே :

உலகில் நிகழும் நிகழ்ச்சி நல்லதாகவும் கெடுதலாகவும் இருக்கலாம். எல்லாம் தெய்வ சம்மதமாகவே நிகழ்ந்துவருகின் றன. தீய செயல்களில் ஈடுபடுபவர்களது வாழ்க்கையில், அவர் களது செயலுக்கேற்ற பலனை இறைவன் உடனுக்குடன் கொடுத் தால்தான் தெய்வம் இருக்கிறது ; இல்லையானால் தெய்வம் இல்லை என்று எண்ணுவது சாதாரண மனிதனின் கருத்து. உயரிய நோக்கமுடையவர்கள் அவ்வாறு நினைக்கமாட்டார்கள். நினைக் கவும் கூடாது. எல்லாம் நன்மைக்கே என்று இறைவனை வழிபட்டு இருத்தல்வேண்டும்.

ஓர் அரசன்கையில்காயம்பட்டது. அதைக்கண்ட அமைச்சன் எல்லாம் நன்மைக்கே என்றான். அரசனுக்குக் கோபம் வந்தது. அமைச்சனைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டான், அதுவும் நன்மைக்கே என்று சொன்னான் அமைச்சன். பின்னர், ஒருநாள் அரசன் வேட்டையாடச்சென்றான் ; களைத்து ஒருமரத்தடியில்

அயர்ந்து தூங்கிவிட்டான். அப்போது சிங்கம் ஒன்று வந்தது. உடன்வந்தவர் அனைவரும் அஞ்சி ஓடிவிட்டனர். அரசன் அருகில் வந்த சிங்கம் அவன் கையில் உள்ள காயத்தைப்பார்த்து அவனை ஒன்றும் செய்யாமல் போய்விட்டது. விழித்து எழுந்த அரசன் நடந்தவற்றை உணர்ந்தான். கையில் உள்ள காயத்தால் உயிர்தப்பினேம் என்று நாட்டிற்கு வந்து சிறையில் அடைபட்டிருந்த அமைச்சனை விடுவித்து நடந்தவற்றைக்கூறி கையில் பட்ட காயம் தனக்கு நன்மையானதை எடுத்துக் கூறினன். பிறகு உன்னைச் சிறையிலடைத்தது எப்படி நன்மையாயிற்று என்று அமைச்சனைக் கேட்டான் அரசன். நான் உன்னேடு காட்டிற்கு வந்திருந்தால் உன்னைத் தனியே விட்டுவிட்டுப் பிரிந்துசெல்லமாட்டேன். உன்னேடு இருந்திருந்தால் சிங்கத்தால் கொல்லப்பட்டிருப்பேன். நான் சிறையில் அடைபட்டிருந்ததால் உயிர் பிழைத்தேன் என்று கூறினன். அதுபோல நம் வாழ்க்கையில் நிகழ்வன எல்லாம் நன்மைக்கே. இறைவன் திருவருளாலேயே எல்லாம் நிகழ்கின்றன என்று எண்ண வேண்டும். "நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது ஒன்றேயும் இல்லை" என்ற அபிராமி பட்டரைப்போல் இருக்கும் தகுதியை அருளுமாறு அம்பிகையை வேண்டி வழிபட்டு, அனைவர்க்கும் நல்லனவற்றை அருள ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கநாதப்பெருமான் திருவடிகளைச் சிந்திக்கின்றேம்.

---

## தருமையாதீனத்தில்

# நாயன்மார்கள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் சைவ சமய நாயன்மார்களில் 18—11—74 சிறப்புலி நாயனர், 29—11—74 கணம்புல்ல நாயனர், 7—12—74 மெய்ப்பொருள் நாயனர், 8—12—74 ஆனய நாயனர் குருபூஜை விழாக்கள் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு சகஸ்ரநாமார்ச்சனை வழிபாட்டுடன் சிறப்பாக நிகழ்த்தப்பெற்றன. அந்நாட்களில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்களால் நாயன்மார்களின் புராண வரலாற்று விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. ஆதீன வேதசிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை மாணவர்களும், ஆதீனத் திருமடத்தின் அலுவலர்களும் விரிவுரையைக் கேட்டும், வழிபட்டும் பயன்பெற்றனர். வழிபாட்டுக்குப்பின்னர் அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப் பெற்றன.

# வருண ஜபம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்வண்ணம் 15, 16, 17—12—74 ஆகிய தேதிகளில் பர்ஜன்யசாந்தி (வருணஜபமும் வேள்வியும்) உலக நலங்கருதி நடைபெற்றது. இது மழையில்லாமல் வாடும் பயிர்களுக்கு மழை பெய்யும்படிசெய்ய வருணனை வேண்டிச் செய்யப்படும் ஒரு சிறந்த வேள்வியாகும்.

## இதன் விபரம் :

சிறந்த வேதவிற்பன்னர்களான வேதியர் பலரை நியமித்து நாடு செழிக்கவும், நல்ல மழை பொழியவும் பர்ஜன்யசாந்தி செய்கிறேன் என்று சங்கல்ப்பம் செய்துகொள்ளவேண்டும். (பர்ஜன்ய என்றால் மேகம். சாந்தி என்றால் மழைபொழியாமலிருப்பதற்குள்ள தடையை நீக்கும் பொருட்டுச் செய்யப்படும் வேள்வி.) (சங்கல்ப்பம் என்றால் மனதினால் நாம் செய்யும் காரியத்தையும், அதனால் நமக்குக் கிடைக்கும் நன்மையையும் நினைத்து உறுதிப்படுத்திக்கொள்ளல்.) இவ்வாறு சங்கல்ப்பம் செய்துகொண்டு புண்யாஹவசனம் என்ற கிரியையால் இடத்தைத் தூய்மைப்படுத்தி ஒரு கலசத்தை ஸ்தாபனம்செய்து அதில் ஜலங்களுக்கு அதிபதியான வருணனையும், மேகங்களுக்குஅதிபதியான இந்திரனையும், திக்பதிகளையும் பூஜித்து அதன் எதிரில் ஒன்பது மண்டலம் போட்டு, காலங்களை நடத்துபவர்களான சூரியன் முதலான ஒன்பது கோள்களையும் அவரவர்களுடைய மந்திரம் கூறி பூஜித்து நமது வேண்டுகோளைத் தெரிவிக்க வேண்டும். அப்போது வேதத்தை நன்கு கற்று அறிந்த அந்தணர்கள் மார்பளவு தண்ணீரில் நின்றுகொண்டு ருக்வேத மந்திரங்களுடன் யசுர்வேதத்தின்கண் உள்ள சம்ஹிதை, சாகை என்ற பகுதிகளில் உள்ள மழையின் தடையை நீக்கும் அறிய பல மந்திரங்களை ஆகாயத்தைநோக்கியவண்ணம் பாராயணம் செய்யவேண்டும்.

ஆசாரியன் பொரசுசமித்து, நெய், அன்னம் என்ற மூன்று பொருள்களால் மற்றும் இருரித்விக்குகளுடன் (ரித்விக் என்பவர்

ஆசாரியனுக்கு உதவியாய் இருந்து கூட ஹோமம் செய்பவர்) ஜலதேவதையான வருணனுடைய காயத்ரீமந்திரத்தினல் பதினயிரம் தடவை ஹோமம் செய்து முடிவில் நவக்கிரஹமந்திரங்களால் இயன்றளவு ஹோமம் செய்யவேண்டும். ஜபம் ஹோமம் இவற்றை முடித்து பிரார்த்தனை செய்யவேண்டும்.

பிரார்த்தனையின் கருத்து :

சந்திரனுக்கு ஒப்பான காந்தியுடையவராயும், கமலத்தின் மீது வீற்றிருப்பவராயும், பாசம், அங்குசம், அபயம், வரதம் என்றவைகளைத் தரித்திருப்பவராயும், முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட எல்லா அவயவங்களையும் உடையவராயும், மலர்ந்தமுகமுடையவராயும் உள்ள வருணனை நல்ல மழையின்பொருட்டு தியானம் செய்கிறேன் ; ஹே வருண ! நீர் ஜலபதியாக ஆகி, முன்பு மகேசுவரனல் மூவுலகங்களையும்காக்க எல்லாப் பயிர்களும் வளர்ச்சியடைய நியமனம் செய்யப்பட்டீர். மழையில்லாமையால் துன்புறுத்தப்பட்டவர்களான எங்களால் மந்திரங்களால் வேண்டப்பட்ட (நீர்) இப்போது மூவுலகையும் காப்பாற்ற சீக்கிரமாகவே மழையைப் பொழிவாய் !

மேகத்தின்மீது வீற்றிருப்பவனும் எல்லோருக்கும் ஈசனும் வஜ்ராயுதம் பாசாயுதம் இவ்விரண்டையும் அணிந்தவனும் இருக்கிற ஜலாதிபதியின்பொருட்டு நான் நமஸ்காரம் செய்கிறேன். எவனுடையகேசங்களில் மேகங்கள் இருக்கின்றனவோ, எவனுடைய எல்லா அங்கங்களின் சந்திகளில் நதிகள் இருக்கின்றனவோ, எவனுடைய குக்ஷியில் நான்கு கடல்களும் இருக்கின்றனவோ ஜலரூபியான அவன்பொருட்டு நமஸ்காரம்.

புஷ்கராவர்த்தங்களான மேகங்களாலே பூமியை நனைப்பவராயும், மின்னலுடன்கூடியவராயும் உள்ள ஜலரூபியின்பொருட்டு நமஸ்காரம். பிராணிகளின் பிராணரக்ஷகராயும் இணையற்ற பலசாலியாயும் இருக்கிற வருணன் எல்லாப் பயிர்களுடைய வளர்ச்சியின்பொருட்டும் வரவேண்டும்.

இவ்வாறு வருணனை வேண்டி, மழையைத் தருவிக்கும் ஆற்றலுடையவரான ரிஷ்யச்ருங்கரையும் வேண்டவேண்டும். அஃது விபண்டகரின் பிள்ளையாயும், பொறுமைக்கு அதிபராயும் இருக்கிற ரிஷ்யச்ருங்க முனிவரை உடனே மழை பொழிய வேண்டி வணங்குகின்றேன். இதன்பிறகு அங்காரகனுடைய காயத்ரிமந்திரம் சொல்லி அங்காரகனையும் வணங்கவேண்டும். ஹோமத்திற்கு முக்கியமாக இடம்பெற்ற மந்திரம் வருணகாயத்ரியாகும். முடிவில் ஒலிமிக்க கோஷத்துடன் ஹே வருண, ஹே ஜலாதிபதே, ஹே பாசத்தை அணிந்தவனே, ஹே மேகத்தை வாகனமாகக் கொண்டவனே, எல்லா மேகங்களையும் இழுத்துக்

கொண்டுவா. இங்கு விடு விடு, பெரிய மழையைப் பொழி பொழி. ஹே இந்திர வா வா. ஹே வருண வா வா. ஹே ரிஷ்யச்ருங்க வா வா. அகத்திய முனிவரே வா. ஹே மேகங்களே வா, ஹே வருண கீழ்காற்றை உண்டுபண்ணு. மேற் காற்றை அழி. ஹே நவக்கிரஹங்களே! நிறைவான நல்ல மழையைக்கொடு. மேகங்களே மழையைக்கொடு என்று துதித்து ஜபிக்கவேண்டும். இவ்வாருகச்செய்யும்முறை சாந்திகுசுமாகரம், சாந்தி ரத்னகரம் என்ற நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. சிவ விஷ்ணு மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்விக்கவேண்டும். வேள்வி செய்யும் அந்தணர்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டும். இவ்வாறு வேள்வி செய்தால் கண்டிப்பாய் மழை வரும் என்பது அந்த நூல்களில் கூறப்படும் பலன்களாகும். சான்ஞேர்கள் மழைக்கு அதிபதியான வருணனைவேண்டி உலக நலங்கருதி வருண ஜபம் முதலியவற்றைச் செய்து வழிபட்டு உய்வார்களாக.

## மழை வேண்டிப் பிரார்த்தனை :

15—12—74 அன்று வியாசபாரதத்தில் உள்ள விராடபர்வம் சிரோமணி, திரு கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களாலும், வில்லிபாரதத்தில் உள்ள விராடபர்வம் வித்துவான். திரு. வி சா. குருசாமி தேசிகர் அவர்களாலும் மழையைவேண்டிப் பாராயணம் செய்யப்பெற்றது.

---

## தருமையாதீனத்தில் சங்காபிஷேகம்

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில், ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும், ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமி திருக்கோயிலில், ஸ்ரீ தருமபுரீசுவரருக்கும் 108 சங்காபிஷேகம் கார்த்திகை மாதத்தின் கடைசிச் சோமவாரத்தன்று (9—12—74) சிறப்புற நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். கார்த்திகைச் சோமவார நாட்களில் திருக்கோயில் முழுவதும் அகல் விளக்குத் தீபங்கள் அழகுசெய்தன. பக்தர்கள் பலர் வந்து வழிபட்டுப் பயன் பெற்றனர்.

### விசேஷ வழிபாடு

ஸ்ரீ தருமபுரீசுவரருக்கு 21—12—74 அன்றும், ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு 23—12—74 அன்றும் உலகநலங்கருதி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனைகளும் நிகழ்த்தப்பெற்றன. ஸ்ரீ ஞானபுரீசுவரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ ஞானம்பிகைக்கு நவசக்தியருச்சனையும் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.


தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



ஞான சம்பந்த நல்விதழைத் தோற்றுவித்த
ஞான குரவர் நற்றிருத்தாள் போற்றுதுமே.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்



இருபத்தா றரையாண்டு இவ்விதழை வளர்த்திட்ட
குருகயிலைச் சுப்ரமண்ய குரவரது அருளுருவம்.

# திருத்தொண்டத் தொகைத் திறன்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், செஞ்சொற்கொண்டல்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

## திருவாரூர்ப் பதிகம் :

திருத்தொண்டத் தொகை திருவாரூரில் நம்பியாரூரர் பாடிய திருப்பதிகம் ஆகும். திருவாரூர்த் திருக்கோயிலுக்குள் புகுந்த போது, 'தேவாசிரியன்' என்னும் மண்டபத்தில் உள்ள திருத் தொண்டர்களைக் கண்டு, "இவர்கட்கு அடிமை செய்யும் திருவருள் எப்போது எனக்கும் வாய்க்கும்" என்று எண்ணினர் நம்பியாரூரர். சிவபெருமான் முதலடியாகத் "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று கொடுத்தருளியதையே தொடக்கமாகவைத்து இப்பதிகத்தைச் சுந்தரர் பாடியருளினர்; இது சேக்கிழார் தடுத் தாட்கொண்ட புராணத்து விளக்கியருளிய செய்தி.

## பெயரமைதி :

'திருத்தொண்டர் திருவந்தாதி', 'திருத்தொண்டர் புராணம்' என்னும் இருபெயர்களையும் நோக்கும்போது, இப்பதிகத் தலைப் பும் 'திருத்தொண்டர் தொகை' என்றே முதற்கண் இருந்திருக்க லாமோ என எண்ணத் தோன்றுகின்றது. 'திருத்தொண்டர்' என்பதும் 'தொகை' என்பதும் இணையுங்கால், 'திருத்தொண்டர் தொகை' என்று ஆகுமேயன்றி, 'திருத்தொண்டத் தொகை' என்று ஆவது இயல்பானது அன்று. சேக்கிழார் 'திருத் தொண்டத் தொகை' என்றே கொண்டுள்ளார். தொகை, வகை, விரி என்ற அமைப்பில் இம்மூன்று நூல்களும் அமைந் துள்ளன.

## தனிச் சிறப்பு :

இத்திருப்பதிகம் ஆரூரரது ஏனைய பதிகங்களினும் தனிச் சிறப்புடையது; அகத்தியர் தேவாரத் திரட்டுள் எடுத்தாளப் பெற்ற ஏற்றம் மிக்கது; முதன்முதலாக நம் செந்தமிழ்நாட்டுச் சிவநெறிச் சீலர்களை எடுத்துத் தொகுத்து மொழியும் சிறப்பு வாய்ந்தது. இது தோன்றியிராவிட்டால், திருத்தொண்டர்

திருவந்தாதியைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் பாடவும், திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் பாடவும் வாய்ப்பு எழுந்திருக்காது; சைவ சமய வரலாற்றுக் காப்பியமாகிய பெரிய புராணம் எழாவிட்டால், சைவ சமய இலக்கிய வளத்தில் ஒரு குறைபாடு ஏற்பட்டிருக்கும் என்று எண்ணவே உள்ளம் தயங்குகின்றது. சைவத்திற்கு, நாலாயிரத் திவ்விய பிரபந்த வியாக்கியானம் போல் ஒரு விளக்கப் பேருரை இல்லாத குறை ஒன்று உண்டென்றும், வைணவத்திற்குப் பெரிய புராணம்போல் ஒரு வரலாற்றுப் பக்திக் காப்பியம் இல்லை என்ற குறையும் உண்டென்றும் கூறுவதைச் சமய உலகம் நன்கறியும். அந்த அளவிற்குத் திருத்தொண்டர் புராணம் திறத்தால் உயர்ந்து திகழ்வதற்குப் பெருந்துணை புரிவன, அதற்கு முன்னர் எழுந்த திருத்தொண்டர் திருவந்தாதியும் திருத்தொண்டத் தொகையும் ஆகும். சேக்கிழார் தம் நூலுள் இதனை உணர்ந்து உருக்கமுடன் ஓதுவர்.

### சேக்கிழார் விளக்கம் :

திருத்தொண்டத்தொகையை நம்பியாரூரர் பாடுதற்கெழுந்த வரலாற்றுப் பகுதி சேக்கிழாரால் மிகத் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது.

“ கண்ணுதல் கோயில் தேவாசிரியனும் காவணத்துள்
விண்ணவர் ஒழியமண்மேல் மிக்கசீரடியார் கூடி
எண்ணிலார் இருந்தபோதில் “ இவர்க்குயான் அடியானாகப்
பண்ணுநாள் எந்நாள் ” என்று பரமர்தாள் பரவச்சென்றார் ”

என்று அடியார்களை மண்டபத்துக்கண்ட நம்பியாரூரர் திருவுள்ளத்தெழுந்த பத்தி உணர்வினை வெளிப்படுத்துகின்றார் சேக்கிழார். “அடியவர்க் கடியன் ஆவேன் என்னும் ஆதரவு கூர” இறைவனைப் பூங்கோயில் உட்புகுந்து போற்றினார் நம்பியாரூரர். ஆரூரர் ஏத்தும் அருமைப்பாட்டைச் சேக்கிழார் நான்கு திருப்பாட்டுக்களிற் கூறியுள்ளார். அவையனைத்தும் இறைவன் திருவடிப் பெருமையைக் கூறுவனவாக அமைந்துள்ளன. “ நிதிமாதவர் நெஞ்சிற் பொலிந்தன ” என்ற தொடர் அடிகளார் உள்ளத்து அடியவர் திறம் ஓங்கிநிற்கும் பான்மையைச் சுட்டுகின்றது. உள்ளக்கருத்தறிந்து முடிக்கும் பெருமான், ஆரூரர் நெஞ்சு நினைப்பதுணர்ந்து அடியவர் பெருமையை அழகுற உரைக்கின்றான். ஆரூரர் “ ஏதந்தீர் நெறியைப் பெற்றேன் ” என்று வணங்கிப் போற்றினார். “ நிதியால் அவர்கள் தம்மைப்

பணிந்துநி நிறைசொன்மாலே கோதிலா வாய்மையாலே பாடென அண்ணல் கூற" எனவரும் சேக்கிழார் செம்மொழி ஊன்றி உணர்தற்குரியது.

திருத்தொண்டர் திறத்தைப் பாடவேண்டுமாயின், வாய்மையோடு பாடவேண்டும்; வழுவின்றிப் பாடவேண்டும் என்ற இரண்டு பொது விதிகளை இங்குச் சேக்கிழார் வற்புறுத்த விழைவதாக எண்ணத் தோன்றுகின்றது. 'கோது இலா' 'வாய்மை'- என்ற சொற்கள் இத்தகு நுட்பத்தை இவ்விடத்து நெஞ்சத்துப் பதிவிக்கின்றன. "இன்னவாறு இன்ன பண்பு என்று ஏத்துகேன்; இதற்கு யான் ஆர்? பன்னுபாமாலை பாடும் பரிசு எனக்கு அருள்செய்" என்று பின்னும் ஆரூரர் வேண்டிநின்றார். அவனருளாலே அவன்றாள் வணங்கும் நல்லியல்புடையவர் நாயனாராதலின் அவரது வேண்டுகோள் புற்றிடங்கொண்ட பெருமான் புனிதமார் திருச்செவிகளில் உருக்கத்துடன் புகுந்தது. "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று, 'எல்லையில் வண் புகழாரை எடுத்திசைப்பா மொழி என்றான்' என்று சேக்கிழார் உரைத்தல் உணரத்தக்கது. இவ்வாறு பாடும் பதிகம் இசைப் பதிகமாக இருக்கவேண்டும் என்று இறைவன் விழைந்தனன் என்பது, 'இசைப் பா' என்பதனால் புலப்படுத்தப் பெறுகின்றது. ஆரூரர் திருவாக்கில் 'கொல்லிக் கௌவாணம்' என்ற பண்ணமைந்த திருத்தொண்டத் தொகை மலர்ந்தது.

"ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப் பதிகம் அருள்செய்தார்" என்கின்றார் சேக்கிழார். அடியவர்பால் சுந்தரர்கொண்ட ஆர்வமே இவ்வழகிய பதிகத்திற்கு அடிப்படையாகிய மெய்ப்பாடு என்பது சேக்கிழார் சுட்டும் சிறப்புடைக்கருத்து என்று கூறலாம். "அன்பு ஈனும் ஆர்வம் உடைமை" என்ற பொய்யாமொழிக்கு இணங்க, ஆரூரர் திருவுளத்தெழுந்த அயரா அன்பே, ஆர்வமாக முறுகி வளர்ந்து, இப்பதிகமாக எழுந்துள்ளது என்று கருதுவது பொருந்தும்.

இவ்வாறு "தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ் மாலைச் செம்பொருளால்" இப்பதிகத்தைப் பாடிய முறையிலேயே சேக்கிழார் தம்முடைய நூலை நடத்திச் செல்கின்றார்; இதனைத் "தம்பிரான் தோழரவர் தாமொழிந்த தமிழ் முறையே, எம்பிரான் தமர்கள் திருத் தொண்டேத்த லுறுகின்றேன்" என்று சேக்கிழார் நுதலிப் புகுவதனால் இனிது உணரலாம்.

### சருக்க அமைப்பு :

திருத் தொண்டத் தொகையுள் அடங்கிய பதினொரு திருப் பாட்டுக்களுள்ளும் அந்த அந்தத் திருப்பாட்டிற் கூறப்பெறும்

அடியார்களது வரலாறுகளை அந்த அந்தத் திருப்பாட்டின் முதற் சொற்றொடராற் பெயர் பெற்ற சருக்கமாக அமைத்துக் கொண்டுள்ளார். அவ்வகையில், 1. தில்லைவாழந்தணர் சருக்கம் 2. இலைமலிந்த சருக்கம் 3. மும்மையாலுலகாண்ட சருக்கம் 4. திருநின்ற சருக்கம் 5. வம்பறுவரிவண்டு சருக்கம் 6. வார் கொண்ட வனமுலையாள் சருக்கம் 7. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம் 8. கறைக்கண்டன் சருக்கம் 9. கடல் சூழ்ந்த சருக்கம் 10 பத்தராய்ப் பணிவார்கள் சருக்கம் 11 மன்னியசீர்ச் சருக்கம் என்ற சருக்கங்கள் அனைத்தும், திகழ்ந்திடக்காணலாம். திருத்தொண்டத் தொகையிடத்துச் சேக்கிழார் கொண்ட பெரு மதிப்பும், பேரன்பும் இவற்றாலும் தெளிவாகின்றன. ஒவ்வொரு சருக்க முடிவிலும், சுந்தரர்க்கு ஒரு வணக்கப் பாடல் பாடித் தம்முடைய அன்பின் சீர்மையைச் சேக்கிழார் புலப்படுத்திக் கொண்டுள்ளார் என்பதும் இங்கு அறியத்தக்க ஒன்றாகும்.

## திருத்தொண்டத் தொகைத் திறன் உரைத்தல் :

இவ்வாறு வரும் சருக்கத்திறுதிப் பாட்டுக்களில் சுந்தரரது சீர்மைப் புகழைப் பலபடியாக் கூறிப் பரவுவர் சேக்கிழார். மும்மையால் உலகாண்ட சருக்கத்தின் இறுதியில் சேக்கிழார் பாடியுள்ள திருப்பாட்டுப் பின்வருமாறு :-

“ நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகை முன்பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம் ”

இதனுள், திருத் தொண்டத் தொகை அருளியதால் நாடு பெற்ற நலத்தினை மிகச் சுருக்கமாகத் “ தேசம் உய்ய ” எனும் சொற்களிற் சேக்கிழார் உணர்த்துவது ஓதி இன்புறத்தக்கது. அன்றியும், சிவபிரானின் திருத்தொண்டர் திறத்தை ஆரூரர் வழிநின்று நம்பியாண்டார் நம்பிகள் நவின்ற நெறியிலே தாம் பாடிய புராணத்தைக் கேட்டு வளவனும் அவனைச் சார்ந்திருந்த அனைவரும் கொண்ட மனநிலையை இனிது அறிந்தவராதலின் “ எல்லா உயிரும் தொழ ” என்ற சொற்களை அழகுற அமைக்கின்றார் சேக்கிழார்.

இதுமட்டுமின்றி வேறு பல இடங்களிலும் சேக்கிழார் திருத் தொண்டத் தொகையின் திறன் உணர்ந்து பொருத்தமான

தொடர்களாற் புகழ்ந்துள்ளார்; அவற்றைப் பின்வரும் பகுதி களிற் காணலாம்.

1. " ஞாலமுய்ய நாமுய்ய நம்பிசைவ நன்னெறியின்
சீலமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பாட "
2. " தென்தமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத் தொகை "
3. " மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தர "
4. " புற்றிடத் தெம்புராணர் அருளினாற்
சொற்றமெய்த் திருத்தொண்டத் தொகை "
5. " மூலமான திருத் தொண்டத் தொகை "
6. " சுந்தரர் திருத்தொண்டத் தொகைத் தமிழ் "

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தின் சருக்கந்தோறும் இவ்வாறு சுந்தரரைப் பரவுவது போன்ற அமைப்புத் திருத் தொண்டர் திருவந்தாதியிலும் காணப்பெறுகின்றதைச் சமய உலகம் அறிந்ததே. அன்றியும் திருத்தொண்டத் தொகை வழி நின்று அந்தாதி செய்யும் பெருபேறு தமக்கு வாய்த்ததே என்று நம்பியாண்டார் நம்பிகள் உருக்கமுடன் பாடும் இறுதிப் பாடல் மறக்கவியலாத மாண்புடையதாகும்.

" ஓடிடும் பஞ்சேந்திரியம் ஒடுக்கி என் ஊழ்வினைகள்
வாடிடும் வண்ணம் நின்று எத்தவம் செய்தனன்! வானினுள்
சூடிடும்சீர்த் திருப்பாதத்தர் தொண்டர் தொகையினுள்ள [ளோர்
சேடர்தம் செல்வப் பெரும்புகழ் அந்தாதி செப்பிடவே "

என்பதே அது; 'ஐம்பொறிகளையும் ஒடுக்கி, ஊழ்வினையின் ஆற்றல் வாடிடும்படியாக யான் எத்தகு தவம் செய்தேன் இந்த அந்தாதி செப்புதற்கு' என்று களிக்கின்றார் நம்பிகள்.

சிவநெறித் தொண்டர்களின் மெய்ப்புகழைத் தாமுணர்ந்த வாற்றைச் சுந்தரர் பாடினார். நம்பிகள் ஆரூரர் தரும் அருங் குறிப்புக்களை ஆழ்ந்து நோக்கி இனிது உணர்ந்து விளக்கிய துடன், தம் காலத்து மேலும் பெற்ற செய்திகளையும் இணைத்துப் பாடினர். இவ்விரு பெருமக்களின் குறிப்புக்களையும் ஓதி உணர்ந்து, செந்தமிழ்ச் சோழநாட்டு முதலமைச்சராக இருந்த நாட்டியலறிவு முதலிய அனைத்தும் தோன்றப் பக்திச் சுவை தனி சொட்டச் சொட்டச் சேக்கிழார் தம்புராணத்தை யாத்துள்ளார் ஆதலின் திருத்தொண்டத் தொகை முதல் நூலாக நின்று வழி யும் சார்புமாகிய இருபெரு நூல்கள் தோன்ற அடிநிலையாகத் திகழ்தல் கருதத்தக்கது. தொகை, வகை, விரியாகக் கொள்ளி னும் இது தொகை மாண்புடன் நின்று தூய ஒளி பரப்பி நிற்றல் வெளிப்படை.

(தொடரும்)

# சமயச் சடங்குகளும் டி. கே. சியும்

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

ப்ரான்ஸ் நாட்டிலே பத்தொன்பதாவது நூற்றுண்டில் ஒரு டி. கே. சி. வாழ்ந்தார். அவருடைய பெயர் மல்லார்மே (Mallarme), மிகச்சிறந்த ரஸிகர்; கவியுங்கூட. "கவிதையே என்னுடைய சமயம்" என்று துணிந்து கூறியவர்: கவிதையின் உளப்பாட்டை உள்ளுணர்வோடு அறிந்த காரணத்தால் அவர் அப்படித் துணிந்து கூறினர். அதோடு நிற்கவில்லே. உணர்வு அற்றவர்கள் கவிதையோடு பழகும்போது கவிதா தேவிக்கே அபாயம் ஏற்படும் என்றுணர்ந்தவர் அவர். ஆகவேதான், அவர் சொன்னர்: "கவிதைக்கென்று தனிச்சடங்குகள் உண்டாக்கி அதை மூடாக்குப் போட்டுப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால், கவிதையுணர்வற்றவர்கள் கவிதையில் கைவைத்து அதைத் தீட்டுப் படுத்திவிடுவார்கள்," என்று.

உண்மைகளைக் கண்டு அனுபவித்த நம் முன்னோர்களுக்கும் மல்லார்மேக்குக்கும் ஏற்பட்ட அதே அச்சம் ஏற்பட்டது. புல்லர்கள் அவ்வுண்மைகளின் புனிதத்தன்மையைஉணராமல் அவற்றை உதாசீனம் செய்துவிடுவார்களே, அல்லது கேவலப்படுத்தி விடுவார்களே என்று பயந்தார்கள். ஆகவே, அவர்கள் அழகிய சடங்குகளைக் கற்பனை செய்து, அச்சடங்குகளுக்குள் உண்மைகளைப் பொதிந்து வைத்துக் காவந்து செய்திருக்கிருர்கள்.

ஆனல், நாளாவட்டத்தில், சடங்குகளின் பொருள் நமக்குப் புலப்படாமல் போய்விட்டது; சடங்குக்குள்ளிருக்கும் உண்மையையும் நாம் அனுபவிக்க இயலாமல் போய்விட்டோம். டி. கே. சி. யைப் போன்ற ஞானிகள் அவற்றை விளக்கும் போதுதான் நமக்குச் சடங்குகளின் மர்மம் தெரிகிறது. தெரிந்ததும் தெளிவும் ஆனந்தமும் ஏற்படுகின்றன.

"நம்முடைய வீட்டுச் சடங்குகள், கோயில்வழிபாடுகள், சமயக் குறியீடுகள், இவைகளில் எல்லாம் (மக்கள் எவ்வளவு

தவருக எண்ணி நடந்த போதிலும்) ஒரு அடிப்படையான உண்மை, அதாவது, பயன் இருக்கவே செய்யும், காலதேசவர்த்தமானங்களுக்குரிய 'டிஸ்கவுண்டுகளை'க் கழித்துப் பார்த்தால் நம் முன்னோர்களைவிடக் கிடையாது என்றே சொல்லத் தோன்றும்," என்று டி. கே. சி. ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சமுதாய வளர்ச்சியிலே சடங்குகளுக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் உண்டு என்பதைக் கண்டவர்கள் டி. கே. சி. ஆனால், சடங்குகளின் பொருளை இழந்துவிட்டு சடங்குகளை மாத்திரம் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு தொங்குகிற சமுதாயம் டி. கே. சியின் ஏளனத்துக்கு இலக்காகிறது.

டி. கே. சி. சொன்னதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது மூன்று :—

(1) சடங்குகள் பொருள் பொதிந்தனவாயிருக்க வேண்டும்.

(2) கேட்பவர்களுக்குப் புரியக்கூடிய மொழியில் சடங்கு மந்திரங்கள் அமைய வேண்டும்.

(3) மேற்சொன்னவாறு சடங்குகள் அமைந்து விட்டால், சமுதாயத்தில் ஆனந்த வளம் பெருகும்; விஞ்ஞானம், தத்துவம், கலை, கல்வி எல்லாம் மேலோங்கி வளரும்.

'மொத்தத்தில், ஆனந்தத்தை வளர்ப்பதற்குரிய வழிகளையறிந்து பிராமணர்கள் தம் சமுதாயப் பழக்கங்களையும் சடங்குகளையும் அமைத்திருக்கிறார்கள். ஆனால், பிராமணரல்லாதாரோ, துன்பத்தை நீடிக்கச் செய்யும் வகையில் பல பழக்கங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்," என்று அடிக்கடி டி. கே. சி சொல்லுவார்கள். "உதாரணமாக, ஒரு பிராமணன் வீட்டிலே சாவு ஏற்பட்டால் உடனே பிரேதத்தை ரேழியில் இழுத்துக்கொண்டு வந்து போட்டு, அக்கம்பக்கத்தாரை எதிர்பார்க்காமல் தகன காரியங்களை முடித்துவிடுவான். ஆனால், பிராமணனல்லாதவன் இழவுச் சடங்கை 6 நாள் இழுத்துக் கடத்தி, தன்னைத் துன்புறுத்திக் கொள்வதோடு மற்றவர்களையும் துன்புறுத்துவான். கலியாண காரியம் ஆனந்தத்தைக் கொடுப்பதால் பிராமணன் அதை நாலைந்து நாள் நீட்டிவைத்து அனுபவிப்பான். ஆனால், "நம்ம பயல்" ஒரே நாளிலே அதை சட்புட்டென்று முடித்துவிடுவான்" என்று ஆற்றாமைப்படுவார்கள் டி. கே. சி.

ஆனால், சைவ மடங்களிலாவது ஆனந்தம் கொடுக்கும் சடங்குகளைக் காப்பாற்றி வருகிறார்களே என்று டி. கே. சி. திருப்தியடைவார்கள். தருமபுரம் மடத்திலே தங்கியிருந்த போது அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு :— “இரண்டு நாளாக மடத்தில் தங்குகிறோம். தமிழ் நாட்டுப் பண்பாடு நிறைந்த நிலயத்தில் தங்குகிறோம். மகாசந்நிதானம் நடத்துகிற பூஜையும், பக்தியும் வெகு ரம்மியம் ஆனவை. சைவத்தின் அழகும், ஆனந்தமும் மனசுக்கு உகந்தவை. இத்தகைய சமயப் பண்பாட்டை வேறு எங்கும் காணமுடியாதுதான்.

சாந்திநிகேதனத்துக்குப் போய்த்தானிருக்கிறேன். சமயப் பண்பாடு என்றால், வறண்ட நிலைதான். கிறிஸ்து மார்க்கத்தின் சாயல்தான். பிரார்த்தனைக்காக இடத்தைச் சுற்றிக் கல்லறைகள் இல்லை; அவ்வளவுதான்.

இங்கோ, மூர்த்தி என்ன, தீபாராதனையின் அழகு என்ன, பாடல் என்ன, எல்லாம் கண்ணையும் மனசையும் கவர்ந்துவிடுகின்றன. சாந்திநிகேதனில் எல்லாம் லெக்சர்தான்.”

கவி ரவீந்திரநாத டாகூர் ஆனந்த அனுபவம் நிறைந்தவர்தான், ஆனாலும் அவருடைய ஆனந்தத்தை அவருக்குப் பின்வரும் சந்ததியாருக்கு அவரால் வழங்க முடியவில்லை. ஆகவே தான் சாந்திநிகேதனத்தில் எஞ்சி நிற்பதெல்லாம் விருதா லெக்சர்தான் என்பது டி. கே. சியின் கருத்து.

அப்படியானால், ஆனந்தத்தை ஒரு சமுதாய அனுபவமாக நிலை நிறுத்துவதற்கு வழியென்ன என்பதை “சரஸ்வதி அல்லது மனோ தத்துவம்” என்ற ‘இதய ஒலி’ கட்டுரையில் மிகுந்த நுணுக்கத்தோடும் கலைப்பாங்கோடும் டி. கே. சி. எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய விளக்கத்தைச் சற்று காது கொடுத்துக் கேட்போம்.

டி. கே. சி. பேசுகிறார்கள் :— “இயற்கை தன் மடிக்குள் ஒளித்து வைத்திருக்கிற அதிசயங்களைக் கண்டுபிடிக்க முயல்வதிலும், கண்டு பிடிக்கிற திறத்திலும், கண்டுபிடித்தவுடன் உண்டாகும் ஆனந்தத்திலும், மனிதன் தனித்தே நிற்கிறான். இதோடு நிற்கவில்லை ; அந்த ஆனந்தத்தை மற்ற மக்களுடன் கூடி அனுபவிப்பதிலும், தலைமுறை தலைமுறையாக மக்கள் சமுதாயம் அனுப

விக்கும்படியான விழாக்கள் ஏற்படுத்துவதிலும், நூல்கள் எழுதி வைப்பதிலும் அப்படியே தனித்து நிற்கிறான்.........

சூரிய கிரகணம் பத்து நாழிகைக்கு ஆரம்பிக்கும் என்றால், ஒன்பதரை மணிக்கே முற்றத்திலும் தெருவிலும் வந்து அண்ணாந்து பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள்.

கிரகணம் பிடிக்க ஆரம்பித்தவுடன் ஐந்து வயதுப்பேரன் அறுபது வயதுப் பாட்டனுக்குச் சுட்டிக் காட்டுகிறான். அப்படியே மாறிப் பாட்டன் பேரனுக்குக் காட்டிப் பரவசமாகிறான். பெண்டுகள் தாளிதத்தையே விட்டுவிட்டு முற்றத்துக்கு ஓடி வந்து அண்ணாந்து பார்க்கிறார்கள், அடுத்த வீட்டு அக்காளையும் பாட்டியையும் உரக்கக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்லுகிறார்கள். அவர்களும் அண்ணாந்து பார்த்துக் கன்னத்தில் கை வைத்த வண்ணமாய் அதிசயித்து நிற்கிறார்கள். இவையெல்லாம் உண்மை ஒன்றைக் கண்டு கொள்ளுவதில் உண்டாகும் உவகையிலிருந்து நிகழ்கின்றன.

இப்படி உண்டாகிற சமுதாய உணர்ச்சியிலும் உத்ஸாகத்திலும் இருந்துதான் சூரிய கிரகணத்தையே விழாவாக ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான வருஷங்களாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

சூரியன் தெற்கோரத்திலிருந்து வடக்கு முகமாகச் செல்ல ஆரம்பிக்கும் முறைமையைக் கண்டு அனுபவித்துச் சங்கராந்திக் கொண்டாட்டம் ஏற்பட்டது. அப்படியே, ஆடிமாதம் காவேரிக் கரையெல்லாம் பதினெட்டாம்பெருக்கின் விழாக்கொண்டாட்டம்.

ஆகவே, இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளில் பதுங்கிக் கிடக்கும் உண்மையைக் கண்டுகொண்டமாத்திரத்தில் மக்களுக்கு மனம் பூரிக்கிறது. ......

மக்கள் ஒழிந்த மற்றப் பிராணிகளிடத்தில் முடியாதகாரியம் இது. எந்த மாட்டு மந்தையாவது சூரியகிரகணத்தை அண்ணாந்து பார்க்குமா? அண்ணாந்து பார்க்கத்தான் அதைச் செய்ய முடியுமா?

தொடரும்)

# “வாழ் முதல்”

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள், M. A , M. O. L.,

**முன்னுரை :**

மணிவாசகப்பெருமான், தமது திருவாசகத்தின்கண் இறைவனைப்பற்றிக் குறிப்பிட்டு வழங்கும் சிறப்பியற் பெயர்கள் பற்பல. அவற்றுள் “வாழ் முதல்” என்பதும் ஒன்று. திருவாசகத்திற் பல இடங்களில், இச்சொற்றொடரை, மணிவாசகப்பெருமான் இறைவனைப்பற்றிக் குறிப்பிடுவதற்குச் சிறப்புற எடுத்து வழங்கியருளியிருக்கின்றார்.

1. “மற்றடியேன் தன்னைத் தாங்குநர்
   இல்லை; என் வாழ்முதலே” (127)

2. “மனத்துணையே என்றென் வாழ்முதலே
   எனக்கு எய்ப்பில் வைப்பே” (143)

3. “மலைத் தலைவா மலையாள் மணவாள
   என் வாழ்முதலே” (144)

4. “போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே” (366)

எனவரும் திருவாசகப் பாடல் வரிகள் பலவற்றில், “வாழ்முதல்” என்னும் பெயரால், மாணிக்கவாசகர் சிவபெருமானைச் சிறந்தெடுத்துக் குறிப்பிட்டுப் புகழ்ந்திருத்தலைக் காணலாம்.

**மனிதநலக் கோட்பாடு :**

நம்முடைய மனித வாழ்க்கைக்கு இன்றியமையாமல் தேவைப்படுகின்ற பொருள்கள் பல. நம்முடைய வாழ்க்கைக்கு உணவும்

---

சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் திருவாசக வகுப்பில் நிகழ்த்திய விளக்கங்களைத் தொகுத்து எழுதியது.

நீரும் காற்றும் உடையும் உறையுளும் ஆகிய எத்தனையோ பல பொருள்கள், இன்றியமையாதனவாக இருக்கின்றன. உணவு உண்ணாமலும், நீர் அருந்தாமலும், காற்றை உட்கொள்ளாமலும், உடை அணியாமலும், உறையுள் இல்லாமலும் நாம் உயிர் வாழ்தல் பெரிதும் கடினமான செயலாகும். இவைகள் அனைத்தும் வாழ்க்கைக்குரிய இன்றியமையாத பொருள்களாகத் திகழ்கின்றன.

## வாழ்முதற் பொருள் :

உணவு நீர் காற்று உடை உறையுள் முதலிய இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பொருளின் உதவி நமக்கு மேலும் மிக மிக இன்றியமையாத முதற் பொருளாக இருந்து வருகின்றது. அப்பொருளின் அடிப்படையும் ஆதரவும் துணையும் இல்லாமல், நாம் வாழ்தல் இயலாது. அப்பொருளையே கடவுள் என்றும், இறைவன் என்றும் பல வகைகளில் ஞான நூல்கள் நவில்கின்றன. அப்பொருள்தான் நம்முடைய வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாமல் உள்ள முதற்பொருளாகத் திகழ்கின்றது. நம் வாழ்க்கைக்கு வேண்டிய பலவற்றுள்ளும் மிகமிக முதன்மையான வேண்டப்படுவ தொன்றாதலின், கடவுட் பொருளை மாணிக்கவாசகர் ‘வாழ்முதலாகிய பொருள்’ என்றார். ‘வாழ்முதல் ஆகிய பொருள்’ என்னும் தொடர் வாழ்க்கைக்கு முதன்மையான இன்றியமையாத பொருள் எனப் பொருள்படும்.

இறையுணர்வும் வழிபாடும், அவற்றின் பயனாக விளைந்து பெருகுகின்ற சான்றாண்மைப்பண்பு நலங்களும் பிறவும், தனிமனிதனுக்குப் போலவே, ஒரு சமுதாயம் அல்லது நாட்டிற்கும், அடிப்படைத் தேவையாக அமைந்து ஆக்கங்கள் பல அளிக்கின்றன. உண்மையான சமய வாழ்வும், உயரிய சமயநெறி உள்ளப் பாங்கும் தான், தனிமனிதனின் வாழ்க்கையைச் சிறந்த முறையில் உருவாக்கி, அவனை வையத்து வாழ்வாங்கு வாழச் செய்கின்றன. இவ்வாறே சமுதாயத்திற்கும் நாட்டிற்கும்கூட, அவைகள் பல்லாற்றானும் நலப்பெருக்கி நன்மை புரிகின்றன.

## வாழ்வின் வேர் :

ஒரு சிலர், “மனிதன் நல்லவனாக, நல்லொழுக்கமுடையவனாக, மற்றவர்க்குத் தீங்கு செய்யாமல் இயன்ற உதவி புரிபவனாக இருந்தால், அதுவே போதும். இறையுணர்வும் வழிபாடும் சிறிதும் தேவை இல்லை” எனக் கருதுகின்றனர் ஆனால் உண்மையில் மனிதன் நல்லவனாக, நல்லொழுக்கமுடையவனாக, மற்றவருக்குத் தீங்கு செய்யாமல் இயன்ற உதவி புரிபவனாக வாழ்

வதற்கு, இறையுணர்வும் வழிபாடும் இல்லாமல் இயலாது. வேர் இருந்தால்தான் மரஞ்செடி கொடிகள் வளரும், மலர் காய்கனிகள் முதலியன தரும். அதுபோல இறையுணர்வு இருந்தால் தான், நல்லொழுக்கம் தோன்றவும், வளர்ந்து நிலைபெறவும் கூடும். 1

தனக்கு மேற்பட்டு, எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் வாய்ந்த பரம்பொருள் ஒன்று, எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் பரவி நின்று, எல்லாவற்றையும் கண்டு கொண்டிருக்கின்றது என்ற திண்ணமான எண்ணம் இருந்தால்தான், ஒரு மனிதன் உண்மையிலேயே நல்லவனாகவும், நல்லொழுக்கம் உடையவனாகவும் இருத்தல் இயலும். எல்லாம் வல்ல முழுமுதற் பரம்பொருள் ஒன்று, இவ்வுலகத்தினையும் இதன்கண் வாழும் எண்ணிறந்த உயிர்களையும், தன்னுடைய பேரறிவாலும் பேரருளாலும் படைத்துக் காத்து வருகின்றது என்று திண்ணமாக உணர்ந்து தெளிந்திருந்தால்தான், ஒரு மனிதன் பிற உயிர்களுக்குத் தீங்கு சிறிதும் இயற்றாமல், நலம்புரிந்து வாழ முற்படுவான். இறையுணர்வும் வழிபாடும் எய்தப்பெறாத ஒருவன் வெறும் மனித நலக்கோட்பாட்டைக் (Humanism) கடைப்பிடித்தலால்மட்டும், சிறந்த உயர்ந்த செவ்விய நிலையை அடைந்துவிடுதல் இயலாது.

### சிறுகாலை வாணியம் :

"முதல் இலார்க்கு ஊதியம் இல்லை" என்பது திருக்குறள். வாணிகம் செய்து பொருளீட்டி நலம் பெறுதற்கு முதற்பொருள் தேவை. முதற்பொருள் (மூலதனம்) இல்லையேல், நாம் வாணிகம் செய்து ஊதியம் பெறுதல் இயலாது. மனித வாழ்க்கையின் இயல்புகளைக் கவிஞர்களும் ஞானிகளும் பல வகைகளில் உருவகம் செய்து விளக்கியிருக்கின்றனர். வாழ்க்கை என்பது ஒரு வகை வாணிகம்; அன்பைக் கொடுத்து அருளைக் கொள்வது "சிறுகாலை நாமுறு வாணியம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பிடுதல் காணலாம். இந்தச் சிறுகாலை வாணியத்திற்கு முதன்மையாகத் தேவைப்படுகின்ற மூலதனம், கடவுளுணர்வும் வழிபாடு

---

1 "Without religious root there can be no real sincere morality, just as without roots there can be no real flowers,

— Count Leo Tolstoy,
Essays and Letters, P. 154.

மேயாகும். கடவுளுணர்வும் வழிபாடும் வாழ்க்கையைத் தூய்மைப் படுத்துகின்றன. நாம் நெறியல்லாத தீநெறிகளில் சென்று உழன்று வருந்தாமல், புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி, நம்மை மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து, கடவுள் உணர்வும் வழிபாடும் நமக்கு நலம்பல புரிகின்றன.

## உடலும் உயிரும் :

உடலின் தூய்மையையும் நலத்தையும் விரும்பாதார் எவருமிலர். உடலின் தூய்மையும் நலமும் எங்ஙனம் இன்றியமையாதனவோ, அங்ஙனமே உள்ளத்தின் தூய்மையும் நலமும் பெரிதும்போற்றத் தக்கனவாகும். உள்ளத்தின் தூய்மைக்கும் நலத்திற்கும் கடவுளுணர்வும் வழிபாடும் பெருநலம் பயன்பனவாகும். புறந்தூய்மை நீரான் அமைவது போல், அகத்தூய்மை இறையுணர்வாலும், வழிபாட்டாலுமே ஏற்படுகின்றன. உடற்பிணியினைத் தீர்ப்பதற்கு மருந்துகள் பயன்படுவதுபோல, உள்ளம் அல்லது உயிர் பற்றிய பிணிகள் நீங்கி நலம் பெறுவதற்கு, இறையன்பும் வழிபாடுமே பெருந்துணை புரிகின்றன.

## நாடும் சமுதாயமும் :

ஒரு தனி மனிதனின் வாழ்க்கை வளம்பெற்றுச் சிறப்பதற்கு, எங்ஙனம் இறையுணர்வும் வழிபாடும் துணைபுரிந்து பெருநலம் விளைவிக்கின்றனவோ, அங்ஙனமே ஒரு சமுதாயத்தின் அல்லது நாட்டின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்குங்கூட இறையுணர்வும் வழிபாடும், அவற்றின் அடிப்படையில் அமைந்த பழக்க வழக்க நல்லொழுக்க நாகரிகப் பண்பாடுகளும், இன்றியமையாதனவாக விளங்கிப் பெருநலம் பயக்கின்றன. 2 இறையன்பும் வழிபாடும் பெருகி வளரும்போதெல்லாம் நாடும் சமுதாயமும் நலம்பல பெற்றுச் சிறந்தோங்கி நிற்கின்றன. இறையன்பும் வழிபாடும் குறையும் போதெல்லாம், நாடும் சமுதாயமும் முறைகெட்டுக் கறைபடிந்து, சிதைந்து சீரழிந்து நலிந்து போகின்றன. எகிப்து, பாபிலோனியா, சீனா, இந்தியா, கிரீசு, உரோம் முதலிய நாடுகளின் வரலாறுகள் இவ்வுண்மையைச் செவ்விதின் வலி

---

2 "Belief is great and life-giving. The History of a Nation becomes fruitful, soul-elevating and great, as soon as it believes."

— Thomas Carlyle.

யுறுத்துகின்றன.3 தனிமனித வாழ்விற்கும், நாட்டின் சமுதாய நல்வளர்ச்சிகளுக்கும், இறையுணர்வு பெரிதும் இன்றியமையாததாக இருக்கின்றது.

"நான் ஒரு நாத்திகன் அல்லன். ஆனால் நிறுவனச் சமய அமைப்பில் எனக்கு நம்பிக்கையில்லை. அஃது எப்படியிருப்பினும், மனிதன் சமயமில்லாமல் வாழ முடியாது; ஏனெனில் அஃது ஒன்றே அவனுடைய ஒழுக்கத்தினை உருவாக்கி அமைக்கின்றது என்பது, என்னுடைய திண்ணமான கருத்து. நான் ஒரு பகுத்தறிவாளன்" 4 என்று நம் பேரறிஞர் அண்ணா அவர்களும், நேர்முக உரையாடல் (பேட்டி) ஒன்றில் தெரிவித்திருப்பது, இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியது.

## இறையுணர்வும் ஒழுக்கமும் :

இறையுணர்வும் வழிபாடும் மனித வாழ்க்கைக்கு எத்தனை இன்றியமையாதவை என்பதனை, லின். யூ டாங் என்னும் சீன நாட்டுப் பேரறிஞரும், பின்வருமாறு கூறியிருத்தல் கொண்டு தெளிவுற உணரலாம்.

"கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, என்னுடைய ஒரே சமயமாக மனித நலக்கோட்பாடே இருந்து வந்தது. 'மனிதன் அறிவை வழிகாட்டியாகக் கொண்டு நடந்து வந்தால்,

---

3 "A Systamatic study of such cases, in the history of great civilizations of ancient Egypt, Babylonia, China, India, Greece, Rome and Western Countries, the principal steps in religious and moral progress have uniformly been taken either during periods of major and protracted calamity or immediately after their termination"

— Dr. Sorokin.

4 "I am no atheist. But I don't belive in institutional religion. It is, however, my conviction that man cannot live without religion, because it alone can build up his character. I am against idol worship. I am also against iconoclasm. Breaking idols is as bad a worshipping them. I am a rationalist."

— Dr. Perarignar Anna,
in the Illustrated Weekly of India,
Sep. 26. 1965.

அதுவே அவனுக்குப் போதும்; அறிவில் முன்னேற்றமடைதல் ஒன்றே, தானாக ஒரு சிறந்த உலகத்தைக் கொண்டுவரும்' என்ற நம்பிக்கை எனக்கு இருந்துவந்தது. ஆனால், இந்த 20 ஆம் நூற்றாண்டின் உலகாயத முன்னேற்றங்களையும், கடவுள் இன்றி வாழ்ந்துவருகின்ற நாடுகளின் அழி செயல்களையும் பார்த்த பிறகு, 'வெறும் மனித நலக்கோட்பாடு மட்டும் போதாது; மனிதன் தான் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்தல் ஒன்றற்கேகூட, தனக்குப் புறம்பாகத் தன்னைவிடப் பெரியதாக உள்ள ஒரு பேராற்றலுடன் தொடர்பு கொள்ள வேண்டியவனாக இருக்கிறான் என்பதனை, நான் இப்போது மிகவும் தெளிவாக நன்குணர்ந்து கொண்டுவிட்டேன். அதனால்தான், நான் மீண்டும் கிறித்தவ சமயத்திற்குத் திரும்பிவிட்டேன். இயேசுபெருமான் எளிய முறையிலும், தெளிவான நிலையிலும் கற்பித்தருளிய கடவுள் உணர்விலும் கடவுள் அன்பிலும் யான் மீண்டும் சென்று சேர்தலை விரும்புகின்றேன்" என்று சீன நாட்டுப் பேரறிஞராகிய லின் யூ. டாங். கூறியிருப்பது, 5 ஒருவகையில் நம்முடைய மாணிக்கவாசகப் பெருமான் இறைவனை 'வாழ்முதல் ஆகிய பொருள்' என்று குறிப்பிட்டு அருளியதின் சிறப்பையும் உண்மையையும் தெளிவுற விளக்குகின்றது எனலாம்.

## முடிவுரை :

எனவே, நாம் நமக்கு வாழ்முதலாக அமைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல இறைவனை, நம் மனம் மொழி மெய்களால் நினைத்துத் துதித்து வணங்கி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலமுற முயலுவோமாக.

---

5 "For over 30 years my only religion was humanism; the belief that man, guided by reason, was sufficient unto himself; that progress only in knowledge would automatically bring a better world. But, having witnessed the advances of the 20th century materialism, and the doings of nations living without God, I am now convinced that mere humanism is not enough - that man, for his very survival; needs contact with a power outside and greater than himself. And that is why I have returned to Christianity. I wish to re-enter that knowledge and love of God which Jesus taught with such clarity and simplicity"

— My steps Back to Christianity.
Dr. Lin. Yu - Tang.

கடிதம்

## Sri Karpakambal Thiruvarul Sangam

17, Dr. Rangachari Road,
MADRAS-4.
13—11—1974.

*** 9, 10 ஆம் தேதி இரண்டு நாளுக்கும் எங்கள் வாழ்க்கையில் பொன்னான நாட்கள். ஸ்ரீ கற்பகாம்பாள் திருவருள் சங்கம் நான்கு ஆண்டுகளாகப் பல திருத்தலங்களுக்குச் சென்று அம்பிகையின் தரிசனம் பெற்றுவந்திருக்கிறது. ஆனால் இந்த முறை மாயூரம், வைத்தீஸ்வரன்கோவில், திருக்கடவூர் மூன்று திவ்ய தலங்களில் பெற்ற ஆனந்தம் மறக்கமுடியாதது.

இரவு 11 மணி 12 மணிக்குக்கூட ஆதீனத்தின் பேரன்பால் கோயில் திருக்கதவுகள் திறக்கப்பட்டு தரிசனம் கிடைத்தது எங்களுக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம். தருமபுர ஆதீனம் திருக்கோயிலில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கையின் தரிசனம் எனக்கு திருக்கயிலைக்குச் சென்றுவிட்டதாகவே தோன்றியது. அம்பிகை நடந்து வருகிற மாதிரி தேஜோமயமான மங்களகர அதி ஸௌந்தர்யமாக தேவி நாஷ் அளித்தாள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளாசிவழங்கி, எங்களுக்குக் குருவாக இருந்து பாடல்களைச் சொல்லிக்கொடுத்த அம்மைக்கு, பட்டாடையும், பட்டமும் அளித்ததற்கு, நன்றி சொல்ல வார்த்தைகள்கிடைக்கவில்லை. மகாசந்நிதானத்தின் அருள் மிகுந்த அதிகப்பொருத்தமான ‘ அருள்இசைமணி ’ என்றபட்டம் அருமையாக அமைந்தது. அபிராமி அன்னையைத் தரிசித்தோம். அந்தாதி பாடினோம். மகாசந்நிதானம் கொஞ்சநேரம்சத்விஷயங்கள் பிரசங்கம் செய்து கேட்க பேராவல். அவகாசமில்லாமல் நிகழ்ச்சி நிரல் அமைந்துவிட்டது.

எனினும் இன்று நம் தமிழ் நாட்டுக்கு, குறிப்பாகத் தஞ்சை மாவட்டத் திருக்கோயில்களுக்குப் பலமுறை வர ஆசைப் படுகிறோம். எல்லாம் வல்ல பரமாசார்யரின் கருணையினால் எல்லாம் நன்றாக நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் அருளில் இன்றும் பல நல்தொண்டுகள் புரிய சக்தியைப் பெறுவோர். நமஸ்காரம்.

இப்படிக்கு
மிகவும் பக்தியும் நன்றியுமுள்ள
வசுமதி ராமசுவாமி

## தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்



இஃறெமது நல்லிதழைப் புரந்துவரும் எம்முதல்வர்
மன்றுபுகழ்ச் சண்முகதே சிகரருவின் திருத்தோற்றம்.

# செய்திகள்

தருமையாதீனத்தில்

## ஸ்ரீ மெய்கண்டதேவநாயனார் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில், சந்தானாசாரியருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் குருபூஜை விழாவை முன்னிட்டு 13—11—74 புதன்கிழமை காலை சமயாசாரியர் சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்று மாலை சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் "சிவஞானபோதம்" என்ற தலைப்பிலும், வித்துவான், திரு. வே. கண்ணப்பன் "மெய்கண்டதேவர் அருள் வரலாறு" என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் வழிபட்டும், சொற்பொழிவுகளைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

## ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், சந்தானாசாரியருள் முதல்வரும் "சிவஞானபோதம்" என்ற சாத்திர நூலை அருளியவரும் ஆகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாரது குருபூஜைத் திருநாளில் (13—11—74) அவரது அவதாரத்தலமாகிய திருப்பெண்ணாகடத்திற்கும், அவர்கள் முத்திப்பேறெய்திய தலமாகிய திருவெண்ணெய்நல்லூருக்கும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். 13—11—74 அன்று இவ்விரு தலங்களிலும் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாருக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. மாலை 7 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவெண்ணெய்நல்லூருக்கு எழுந்தருளி ஸ்ரீமெய்கண்டதேவருக்கு சாதராசாத்தி தீபாராதனைகள் செய்து வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

பின்னர், சமயாசாரியர்களுள் மூன்றுமவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்டபெருமானின் திருவருட்டுறை ஆலயத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ தடுத்தாட்கொண்டநாதருக்கும்,

ஸ்ரீமங்களாம்பிகைக்கும் பரிவட்டங்கள் சாத்தச்செய்தும், ஸ்ரீசுந்தர மூர்த்தி சுவாமிக்கு சாதரா சாத்தச்செய்தும், வழிபாடாற்றினர் கள். திருவெண்ணெய்நல்லூரில் திருவருட்டுறை நாதர் திருக்கோயில் நிர்வாக அதிகாரி, திருப்பணிக் குழுத் தலைவர், திரு. T. C. பாலசுப்பிரமணியம், மற்றும் அறங்காவலர் குழுத்தலை வர் முதலியோர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபட்டு மகிழ்ந்தார்கள். பின்னர் திருப்பெண்ணாகடத்திற்கு எழுந்தருளி, ஸ்ரீ மெய்கண்டதேவருக்கு சாதரா சாத்தி வழிபட்டு தருமைக்கு மீண்டருளினார்கள். திருப்பெண்ணாகடத்தில் அன்பர் கள் பலர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

## கந்தசஷ்டித் திருநாளில் கந்தபுராணப் பாராயணம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம், ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜைமடத்தில், அறுமுகப்பெருமானுக்குகந்த கந்த சஷ்டித் திருநாட்களில் கந்தபுராணப் பாராயணமும் விரிவுரை யும் நாள்தோறும் மாலை 7 மணி அளவில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் M. A., Phd., அவர்களால் நிகழ்த்தப்பெற்றன. தொடர்ந்து புலவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்களால் கந்தபுராணப் பாராயண மும் விரிவுரையும் நிகழ்த்தப்பெறுகின்றன, அன்பர்கள் பலர் கலந்துகொண்டு பயன்பெறுகின்றனர்.

**ஆதீனத் திருக்கோயில்களில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருக்கோயில்களில் கந்தசஷ்டித் திருநாட்களில் கந்த புராணப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. பாரா யணத்திற்குப் பின்னர் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு சகஸ்ரநாமார்ச் சனை நிகழ்த்தி, தீபாராதனைகள் செய்து, கந்தபுராண பாரா யணத்திற்கும் வழிபாட்டிற்கும் வந்திருந்த அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன. திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீ சுவரசுவாமி தேவஸ்தானத்தில், திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான், திரு. சுவர்ணகாளீசுவரன் அவர்களாலும், திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ் தானத்தில் திருவாரூர் உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. சு. மு. சுந்தரராசன் அவர்களாலும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனத் தமிழ்ப்

புலவர், வித்துவான், சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்களாலும், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌன மடத்தில், திருச்சி, திரு. முத்துக்கந்தசாமி, திரு. சொ. கிருஷ்ணன் ஆகியோராலும், உய்யக்கொண்டான் ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி தேவஸ்தானத்தில், திரு. வைத்தியநாதன் அவர்களாலும், சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமிதேவஸ்தானத்தில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருநெறிச்செம்மல், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களாலும், புலவர், திரு. இரா. செல்வக் கணபதி அவர்களாலும் கந்தபுராணப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன.

**வேளூரில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 14—11—74 வியாழக்கிழமை முதல் கந்தசஷ்டி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கந்தசஷ்டி விழா நாட்களில் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி பிராகாரத்தில் உலாவர முருகபக்தர்கள் தரிசித்துமகிழ்ந்தனர். 19—11—74 செவ்வாய்க்கிழமை சூரசம்காரத் திருநாள். அன்று ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி திருவீதியுலாவாகஎழுந்தருளசூரசம்காரக் காட்சி நடைபெற்றது, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

கந்தசஷ்டி விழா நாட்களில், வைத்தீசுவரன்கோயில், வித்துவான், திரு. முருகையாதேசிகர் அவர்களால் நாள்தோறும் மாலை 6 மணி அளவில் கந்தபுராணப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. முருக பக்தர்கள் பலரும் வந்து வழிபட்டுப் புராண விரிவுரையைக் கேட்டும் பிரசாதம் பெற்றும், மகிழ்ந்தனர்.

**மாயூரம் - குமரக்கட்டளையில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி விழா 14—11—74 வியாழக்கிழமை முதல் 20—11—74 புதன்கிழமை முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நாள்தோறும் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருவீதியுலா சிறந்த நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் நடைபெற்றது. திருவிழா நாட்களில் வித்துவான். திரு. வே. கண்ணப்பன், வித்துவான். திருமதி. ப. நீலா B. A. வித்துவான். திரு. ஆ. இராமபத்திரன் B. A., ஆகியோரால் கந்தபுராணப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன.

கந்தசஷ்டி விழா நாட்களில் தேவஸ்தான தேவார வகுப்பு ஆசிரியர் மாணவர்களால் தேவாரம், திருப்புகழ் முதலியன பாராயணமாக நிகழ்த்தப்பெற்றன. 19—11—74 செவ்வாய்க் கிழமையன்று வேல் வாங்குதலும், சூரசம்காரக் காட்சியும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அன்று ஸ்ரீ சுப்பிரமணியர் சந்நிதியும், பிராகாரமும் வண்ணக் காகிதங்களாலும் மின் விளக்குகளாலும் ஒப்பனை செய்யப்பெற்று எழிலுடன் விளங்கின. அன்பர்கள் பலர் ஸ்ரீ முருகனைத் தரிசித்தும் விரிவுரையைக் கேட்டும் பயன்பெற்றனர்.

**திருப்பனந்தாளில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 14—11—74 வியாழக்கிழமை முதல் 19—11—74 செவ்வாய்க்கிழமை வரை கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு நாள்தோறும் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், கந்தபுராணம் பாராயணமும் விரிவுரையும் சிறப்பாக நிகழ்ந்தன. முதல்நாள் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. R. சிவப்பிரகாசம் அவர்களும், பிற நாட்களில் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்களும் விரிவுரை ஆற்றினார்கள். ஏராளமான ஆடவர்களும் மகளிர்களும் சிறுவர்களும் வந்திருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

## திருக்கடவூரில் சங்காபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் கார்த்திகைச் சோமவார நாட்களில் ( 18-11-74, 25-11-74, 2-12-74 9-12-74 ) 1008 சங்காபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கார்த்திகைச் சோமவார நாட்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி, பக்தர்களுக்கு சங்காபிஷேக தீர்த்தப் பிரசாதம் முதலியவற்றை வழங்கியருளினார்கள். பக்தர்கள் திரளாக வந்து வழிபட்டு உய்ந்தனர். காவிரி முதலிய பல்வகைத் தீர்த்தங்களைக் கொணர்ந்து அவற்றில் இருநூற்றுஐம்பதுக்கு மேற்பட்ட பொருள்களைக் கலந்து சங்குகளில் நிரப்பி வரிசையாகப் பரப்பிவைத்து நடுவில் உள்ள பீடத்தில் வலம்புரிச் சங்கை வைத்து வேள்வி முதலியவற்றால் பூசித்து அச்சங்குகளில் உள்ள தீர்த்தத்தைப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வது சங்காபிஷேகமாகும். இச்சங்காபிஷேகத்தால் நோய் நீக்கத்தையும், அறம் பொருள் இன்பங்களையும் பெறலாம்.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

# கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

தருமையாதீனம், சென்னை சமயப் பிரசார நிலையத்தில், கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா, 2—11—74 சனிக்கிழமை யன்று, திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்கள் தலைமையிலும், 30—11—74 சனிக்கிழமையன்று, குருஜி சுந்தரராமன் அவர்கள் தலைமையிலும் நிகழ்ந்தது. நிலையத்திருமுறை ஆசிரியர், திரு. சு. ஞானப்பிரகாசம், திரு. N. இராமமூர்த்தி அய்யர், தேவார இசைமணி. திரு. ந. இராமலிங்கம்; ஆகியோர், வேளூர்த் தேவாரம், திருப்புகழ் இவற்றைப் பாராயணம் செய்து நாமாவளி பஜனை நிகழ்த்தினர். முருகன் பெருமையையும், கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் முருகன் என்பதையும் விழாத் தலைவர்கள் முறையே விளக்கிப் பேசினார்கள். விழாவிற்கு வந்திருந்தோரனை வர்க்கும் சந்தனக்குழம்பு, விபூதிப்பிரசாதங்கள் வழங்கப்பட்டன. வரவேற்புரை, நன்றியுரை முதலியன கூறி வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், கூட்டத்தை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

### மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலைய மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு, 24—11—74 ஞாயிற்றுக்கிழமையன்று திருவல்லிக்கேணி டாக்டர் நடேசன் சாலையில் உள்ள, ஸ்ரீ திரிபுர சுந்தரி சமேத ஸ்ரீ தீர்த்தகபாலீஸ்வரர் ஆலத்தில் விசேஷ அபி ஷேக ஆராதனைகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பின் னர் நிகழ்ந்த சமயப்பிரசாரக் கூட்டத்தில் திரு. C. செல்வநடராச முதலியார், திரு. திருநாவுக்கரசு B. A., B. SC., E. T., புலவர். திரு புண்ணியகோடி, திரு. சே. கிருஷ்ணன், குமாரி. கௌரி ஆகியோர், வழிபாட்டின் இன்றியமையாமை பற்றிப் பேசினார்கள். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் இறை யருளைப் பெற பக்திவேண்டும். பக்தியோடு வழிபடும் அன்பர்கள் எல்லா நலமும் எளிதில் எய்தப்பெறுவர் என்றும் கூறினார்கள். பிரசார நிலையத் திருமுறை ஆசிரியர். திரு. சு. ஞானப்பிரகாசம் தேவாரத்திருப்பதிகங்களையும், அபிராமி அந்தாதியையும் பாரா யணம் செய்தார். வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்கு விபூதிப்பிரசாதம் முதலியன வழங்கப்பட்டன.

### திருக்கார்த்திகை விழா :

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 29—11—74, வெள்ளிக்கிழமை திருக்கார்த்திகை விழா, தருமை

யாதீனப்புலவர், திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. புலவர். திரு. த. கேசவன், புலவர். திரு. ஏகாம்பரம் ஆகியோர் திருக்கார்த்திகைத் திருநாள் பற்றி விரிவுரையாற்றினார்கள். திரு. ஞானப்பிரகாசம், திரு. N. இராமமூர்த்தி அய்யர் ஆகியோரால் திருவண்ணாமலைத் திருப்பதிகப் பாராயணமும், திருப்புகழ், நாமாவளி பஜனையும் நிகழ்த்தப் பெற்றன. வழிபாட்டிற்குப் பின்னர், அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

**திருக்கடவூர், சங்காபிஷேகத் தீர்த்தம் வழங்கும் விழா :**

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரப்பெருமானுக்கு கார்த்திகை சோம வார நாட்களில் நிகழ்த்தப்பெறும் 1008 சங்காபிஷேகத் தீர்த்தம் வழங்கும் விழா, 19—11—74, 26—11—74 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. 19—11—74 அன்று சங்காபிஷேகச் சிறப்பைப்பற்றி, வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் விரிவுரையாற்றினார்கள். 26—11—74 அன்று டாக்டர். திரு. M. நடராஜன் (ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருக்கடவூர்த் திருப்பதிகங்கள், திருப்புகழ், முதலிய பாராயணங்கள் நிகழ்த்தப்பெற்றன. விழாவிற்கு வந்திருந்தோரனைவருக்கும் சங்காபிஷேக தீர்த்தமும், விபூதிப் பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

மதுரை, தருமையாதீனம்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் நிகழ்ந்துவரும்

## சமயப் பிரசாரத்தின்
## இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

தருமையாதீனத்திற்குச்சொந்தமான, மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் நிகழ்ந்துவரும் சமயப் பிரசாரத்தின் 2 ஆவது ஆண்டு நிறைவு விழா 17—11—74 ஞாயிற்றுக்கிழமை மதுரை மாநகராட்சி மன்றத் தனியதிகாரி திரு. வி. சங்கர சுப்பையன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மதுரை, புலவர். தா. குருசாமி தேசிகர், விழாவிற்கு வந்திருந்தோரனைவரையும் வரவேற்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் வாழ்த்துச் செய்தியை வாசித்தளித்து, மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தின் பணிகளையும் எடுத்துரைத்தார்கள். ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. நெ. பொன்னப்பன் அவர்கள் ஆண்டுவிழாவைத் தொடங்கிவைத்து உரையாற்றினார்கள். சிவ தர்மபாஸ்கர. திரு. ம. க. சுந்தரேசபட்டர் அவர்கள் வாழ்த்துரை

வழங்கினார்கள். தலைவர் அவர்களது தலைமையுரைக்குப் பின்னர் சென்னை கயப்பாக்கம் திரு.சோமசுந்தரம்செட்டியார், பேராசிரியர் திரு. அ. சங்கர நாராயணன். திருமதி. இறை. பொற்கொடி ஆகியோர் முறையே "சைவநெறி" "அடியார்திறன்" "பழிதீர்த்த பாவை" என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினார்கள். தலைவர் தமது முடிவுரையில் திருமடத்தின் சமயப் பிரசார நிகழ்ச்சிகளைப் பாராட்டி, இவை செம்மையாக நிகழ அருள்பாலிக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு வணக்கம் தெரிவித்துக்கொண்டார்கள். நன்றியுரை வாழ்த்துக்களுடன் விழா இனிது நிறைவு பெற்றது.

## கந்தபுராண விரிவுரை :

மதுரை, தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில், கந்தஷஷ்டி விழாவை முன்னிட்டு 14—11—74 வியாழக் கிழமை முதல் தொடங்கி கந்தபுராண விரிவுரை, கயப்பாக்கம். திரு. சோமசுந்தரம்செட்டியார் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. 21—11—74 வியாழக்கிழமை அன்று கந்தபுராண விரிவுரை நிறைவு விழா, சென்னை, வருவாய்த்துறைத் தணிக்கை அதிகாரி திரு. வி. என். ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. புலவர். திரு. தா. குருசாமி தேசிகர் அனைவரையும் வரவேற்று, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசிச் செய்தியை வாசித்தளித்தார். பின்னர், திரு. சுப்பராமன் அவர்களால், கந்தபுராண விரிவுரை நிகழ்த்திய கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுக்குப் பரிவட்ட மரியாதைகள் செய்யப்பட்டன. இறைவணக்கத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

### திருநெல்வேலி, தருமையாதீன மடாலயத்தில்

## முப்பால் விருந்து

திருநெல்வேலி, தருமையாதீன மடாலயத்தில் தருமையருள் பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தின் சார்பில் ஞாயிற்றுக் கிழமை தோறும் செவிக்குணவாக சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. முப்பால் விருந்து - திருக்குறள் தொடர்ச்சொற்பொழிவு 7—7—74 முதல் நடைபெற்று 24—11—74 இல் நிறைவுபெற்றது. புலவர் திரு. வ. ச. நடராசபிள்ளை, திரு. ந. சொக்கலிங்கம்M.A. சிவமணி, புலவர். திரு. ம. சிவசம்பு ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரையாற்றினர். நூற்றுக்கணக்கான அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( ஆனந்த௵ மார்கழி௴ 1௳ முதல் 29௳ முடிய )
( 16—12—74 முதல் 13—1—75 முடிய )

ஸ்ரீ சிவசக்திகளின் அருளால் ஆனந்த௵ கார்த்திகை௴ 30௳ பானுவாரம் பூராட நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் சூரிய உதயம் முதல் 57 நாழிகை 59 விநாடிக்கு ஸ்ரீ சூரியபகவான் உலக க்ஷேமத்தின் பொருட்டு விருச்சிக லக்கினத்தில் தனுர் ராசி சங்கிரமணமாக மார்கழிமாதபிரவேசம் செய்கிறார். அதனுடைய பலன் உலகெங்கும் தனதான்ய விருத்தியுடன் சந்தோஷகரமாய் பிரஜைகள் ஜீவிக்கவும், உலகெங்கும் அமைக்கப்பட்டுள்ள தர்ம ஸ்தாபனங்கள், திருமடங்கள், தேவாலயங்கள் சிறப்புடன் விளங்கவும், அவற்றிலுள்ள கர்த்தாக்களாகிய புண்ணிய சீலர்களின் அறங்கள் தழைக்கவும் அனுக்கிரகம் ஏற்படும். உலகில் அதர்மம் நீங்கும். தேவாலயங்களின் தேவ பூசனைகள் சிறப்புடன் நடைபெறும். பிரஜைகள் ஆஸ்திக உணர்வுடையவர்களாகி சுபிட்சத்துடன் வாழ்வார்கள்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. அ. )

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2 க்குரிய சுக்கிரன் நிலையால் தனவசதி சீராக இருக்கும். அவசியமான செலவினங்கள் அளவுக்கு மீறி காணப்படும். 3 க்குரிய புதன் நிலைமையால் இம்மாதம் முற்பகுதியில் பந்துக்களில் ஓர் மனஸ்தாபமும், பிறர் குறை கூறுதலும் நேரினும் தெய்வானுக்கிரகத்தால் குறை நீங்கும்; திடசித்தம் ஏற்படும். சகோதரருக்கு உஷ்ணவாதம், தந்தவாயு போன்ற உபத்திரவம் வந்து நீங்கும். மற்றைய கிரகங்களின் நிலையால் தெய்வ நம்பிக்கை மிகுந்து காணுதலும், சுகானுபவமும், நண்பர்களால் உதவிகளும், குருமார்கள் தரிசனங்களும் ஏற்படும். இம்

மாதம் 15வக்குமேல் செய்தொழிலில் கீர்த்தியும், சத்துருபங்கமும், தனவரவும், ஆரோக்கியமும் ஏற்படும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½
( இ. உ. ஏ. – ஓ. வ. வி. வூ. – வெ. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனுக நடக்கும். தனவசதி சுமாராகவும், குடும்பம் புத்திரர் களின் நலன்கள் நன்ருகவும் இருக்கும். முன்பிருந்த பெண்கள் வகை மனக்குறை நீங்கி சகசன்ய நிலைமை இருந்துவரும். வீடு, வாகன வசதிகளில் மாறுதலான குழப்பங்கள் காட்டி நீங்கும். 5க்குரிய புதன் நிலைமையால் தெய்வ சிந்தனை மிகும். புத்திரர் களின் ஜீவன செளகரியங்கள் முன்னேற்றமுடையதாக விளங் கும். அறிஞர்கள் சான்ருேர்களின் சந்திப்பும், உயர்ந்த அந்தஸ் துகளும் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நடுவு நிலைமையும், சாதாரண பலனுகவும் இருக்கும். பொது நலன்களில் ஈடுபடுவதால் பொதுமக்களின் போற்றுதல்கள் ஏற்படும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ங. ச. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபா சுபம் கலந்து நடக்கும். தனவசதி திருப்திகரமாக இருந்துவரும். சகோதரர்களின் குடும்ப நலன் மேன்மையுடையதாக விளங்கும். வீடு வாகனங்களின் வசதிகள் திருப்திகரமாக இருந்துவரும். புத்திரர், புத்திரிகளின் நலன் நன்ருக இருந்துவரும். தனது தேகத்தில் மூலச்சூட்டால் உபத்திரமும், சிறுநீர் கோளாறும் வந்து நீங்கும். கணவன் மனைவியரிடையேயும் பந்துக்களிலும் ஓர் மனஸ்தாபும் ஏற்பட்டு இம்மாதம் பிற்பகுதியில் விலகுவதா கும். தொழில் துறையில் அல்லது உத்தியோகத்தில் இம்மாதம் 15வ க்குமேல் சிறப்பும், நற்கியாதியும் ஏற்படும். எதிர்ப்பு நீங்கும், லாபாதிபதி வலுப்பெற்றதால் ஸ்திர சொத்துக்களில் லாப பிராப்தியும், எடுத்த காரியத்தில் ஜெயமும் ஏற்படும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
( ஹி. – ஹு. ஹெ. ஹோ. ட. – டி. டு. டெ. டோ. )

கடகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர மான பலனைத்தரும். 2க்குரிய சூரியன் வலுப்பெற்றுள்ளதால் தனவசதி, கௌரவம் பொருந்தியுள்ளதாக இருக்கும். குடும் பத்தில் சுபகரம் ஏற்படும். வாகன செளகரியம், பசு பால் கறவை திருப்திகரமாக இருக்கும். தொழிலாளர் அக்கம்பக்கத்தவர்

களால் இருந்துவந்த அல்லல் நீங்கும். கிரியைஸ்தானுதிபதி செவ்வாய் ஆட்சிபெற்று இராகுடன் சம்பந்தப்பட்டதால் யந்திர சாதனத் தொழிலில் புதிய மாறுதலை உண்டுபண்ணும். எக் காரியத்திலும் ஜெயம் உண்டாகும். தொழில் அல்லது உத்தி யோகம் செவ்வனே நடைபெறும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மெ. – டோ. ட. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2 க்குரிய புதன் 5 லும் அதன் நற்பலஸ்தானத் தில் வேறு கிரகமும் இருப்பதால் தனவசதி திருப்திகரமாக இருந்துவரும். ஆயினும் குடும்பத்தில் அதிருப்தியான சூழ்நிலை யாக இருக்கும். 3 க்குரிய சுக்கிரன் நிலைமையால் சகோதரர் குடும்ப நலம் நன்றாக இருக்கும். வீடு, வாகன, கால்நடைகளின் வசதிகளில் புதிதான மாறுதல்களை ஏற்படுத்தும். உடலில் உஷ்ணவாதத்தால் அஜீர்ணம், வாந்தி முதலிய உபத்திரவம் வந்து உடன் குணமாகும். இம்மாதம் 15 உ க்குமேல் சகல இன்னல்களும் மிரட்சிகரமான நிலைமையும் நீங்கி சுபிட்சத்தையும் மனதில் குதூகலநிலைமையையும் உண்டாக்கும். தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்பான நிலைமை இருந்துவரும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ. பா. பி. – பூ. ஷ. ண. ட. – பே. போ.

கன்னியாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனைத்தரும். 2 க்குரிய சுக்கிரன் நிலையால் குடும்பத்தில் எதிர்பாராதவகையில் செலவுகள் அளவுக்குமீறிக் காணப்படும். சகோதரர் குடும்பம் பிரசித்தமாயினும் வீண்பழிசுமத்தல் காரண மாக மன ஆயாசமும், தொழில் துறையில் மாறுதலான நிலைமையு மாய் இருக்கும். வீடு, வாகனவசதி ஸ்திரமற்ற நிலைமையில் இருக்கும். புத்திரர்களின் ஆரோக்கியம், கல்வி முதலியவை திருப்திகரமாக இருந்துவரும். பெற்றோர்களுக்கு உடலசதியும், மனச்சோர்வும், வீண் கவலையும் ஏற்பட்டு விரக்திமனோபாவமாக இருக்கும். தொழில்துறையில் அதிக பிரயாசையும் மேன்மேலும் ஆகவேண்டியவை சுமையாகவும் இருந்துவரும். ஆயினும் தெய்வீக பலத்தால் எளிதாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமா ரான பலனைத்தரும். 2 க்குரிய செவ்வாய் நிலையால் வரவுக்

கேற்ப செலவு செய்யும் சமயோசித புத்தியை உண்டாக்கும். வரவு குறைவாகவும், செலவு அதிகமாகவும் தோன்றும். வர வேண்டிய வட்டி, வாடகை, குத்தகைப்பணம் வந்துசேரும். குடும்பத்தில் பிறர் குறை கூறுதல் காரணமாக சில மாறுதல்களை உண்டாக்கும். புத்திரர் பௌத்திரர்களின் நலன் நன்ருக இருந்துவரும். பெற்ருேரின் உடல் நலம் பாதிப்பதாக இருக்கும். நிதி விஷயத்தில், ஸ்திர சொத்துக்களில் ஒரு மாற்றத்தை உண் டாக்கும். தொழில் அல்லது உத்தியோகத்தில் உழைப்புக்கேற்ற பலன் இருந்துவரும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ.- ந. நி. நு. நே. - நோ. யா. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரபலனை இருந்துவரும். தனவசதி சரளமாக இருந்து வரும். 3 க்குரியவரை குரு பார்ப்பதால் சகோதரரின் நலமும், வீடு, வாகனங்களின் சௌகரியமும் நல்ல நிலைமையில் இருந்து வரும். புத்திரர்களின் ஆரோக்கியம், கல்வி நன்ருகவும், சிறப் புடனும் இருந்துவரும். தாம்பத்ய வாழ்க்கை மகிழ்ச்சி பொருந் தியதாக இருந்துவரும். 10 க்குரிய சூரியன் நிலையால் அரசாங் கத்தில் அதிக ஈடுபாடுகளும், உத்தியோகத்தில் மதிப்பும் ஏற் படினும் அதிகமாக அல்லல்களும் அவற்றைச் சமாளிக்கும் வல்ல மையையும் உண்டாக்கும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ. ப. பி. - பூ. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமா ரான பலனை இருந்துவரும். தனாதிபதி சனி மிச்சிரனாக இருப் பதால் வருமானம் குறைவாகவும், மனைவி மைந்தர்களால் செலவு அதிகமாகவும் இருந்துவரும். சப்தமத்தில் உள்ள சனி 4 ஆம் இடத்தையும், சுக்கிரனையும் பார்ப்பதால் பசு பால் கறவை குறை வாகவும் சுகானுபவங்களில் மனவெறுப்பை உண்டாக்குவதாக வும் இருக்கும். இம்மாதம் 15 உ க்குமேல் பசு விருத்தியும், களத் திர புத்திரர்களின் சௌகரியமும், குடும்பத்தில் நல்ல நிகழ்ச்சி கள் ஏற்படுதலுமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் முன்பிருந்த குழப்பம் நீங்கி மன அமைதியை உண்டாக்கும்.

10. மகரம்-உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கெ. கொ. - க. கீ.

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பல னைக்கொடுக்கும். 2 இல் குருவும் 2 க்குரிய சனி குருவால் பார்க் கப்பட்டும் இருப்பதால் வேண்டிய அளவுக்கு தன வரவு வந்து

கொண்டிருக்கும். சகோதரர் குடும்பத்தில் அல்லல் பிரச்சனை அதிகமாக இருக்கும். 4, 5 க்குரியவர்கள் நிலையால் வீடு வாங்குதல், அல்லது மைந்தர்களின் நலனுக்காக முதலீடுசெய்யநேரும். 9, 10 க்குரியவர்கள் 12 இல் இருப்பதால் இம்மாதம் ஓர் ஸ்தல யாத்திரை செய்யநேரும். கணவன் மனைவி வாழ்க்கை ஒற்றுமையுடன் விளங்கும். குடும்ப சம்பிரதாய காரியங்களைச் செய்து முடித்தலும், அதனால் செலவு அதிகமாவதைச் சமாளித்தலுமாகும். தொழில் அல்லது உத்தியோகத்தில் நற்கியாதி இருந்துவரும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி – ¾

( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த )

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சம பலனாக நடக்கும். பண நெருக்கடியும், தக்க சமயத்தில் பண வரவும் இருக்கும். இந்நிலைமையில் மனக்கலப்பேதவிர உடலில் வியாதி ஒன்றுமில்லை எனலாம். விவசாயத்தில் நல்ல வருவாய் ஏற்படுவதற்குக் கிரகங்கள் சாதகமாக இருக்கின்றன. வட்டி, வாடகை வசூல் செய்வதில் சற்று தாமதத்துடன் வந்துசேரும். கமிஷன் வியாபாரம் முதலியவற்றில் நல்ல வாடிக்கையாளர்கள் ஏற்படுவார்கள். மனைவிக்கு பித்தாதிக்கத்தால் சிறு தொல்லை வந்து நீங்கும். தர்மகர்மாதிபதிகளின் நிலையால் தருமகாரியங்களில் ஈடுபாடுகளும், ஓர் ஸ்தலயாத்திரையும் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகம் இராஜகண்யமுடையதாக இருக்கும். சிரமம் நீங்கி காரியம் எளிதாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

( தி. – து. ஸ. ச. த். – தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனைக் கொடுக்கும். பண வசதி திருப்தியளிக்கும். ஆயினும் உடன் தண்ணீர்போல் செலவாகிவிடும். பழைய பாக்கிகள் வட்டி முதலியன வந்துசேரும். உடன்பிறந்தவர்கள் சிறப்புடன் வாழ்வார்கள். 4 ஆம் இடத்தில் சனி இருப்பதால் பசு பால் கறவை குறைவாக இருக்கும். மற்றக் கிரகங்களின் நிலையால் புத்திரர் பௌத்திரர்களின் நலன் ஒருபுறம் மகிழ்ச்சியையளிக்கும். ஒருபுறம் தவிர்க்கமுடியாத நிலைமையிலும் தன் மதிப்பு அந்தஸ்து குறையாத வகையிலும் பொருட் செலவை ஏற்படுத்தும். மனைவிக்கு ரத்த பித்த மயக்கம் ஏற்பட்டு குணமாகும். 10 ஆம் இடம் லாப விரயாதிபதியால் பார்க்கப்பட்டதால் வரவும் செலவும் சமமாக இருக்கும். ஜீவனத்தொழில் அல்லது உத்தியோகத்தில் நடுவு நிலைமையாக இருந்துவரும்.

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

# முப்பத்துமூன்றும் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1 | அட்டைப்பட விளக்கம் | 6, 144 |
| 2 | அணுத்தருந்தன்மை இலையோன் காண்க | 346 |
| 3 | அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா அழைப்பு | 1 |
| 4 | அப்பரடிகளின் அருஞ்சொற்கள் | 537, 586 |
| 5 | அபிடேக முறை | 80 |
| 6 | அரும் சுடர்க் காட்சி | 11 |
| 7 | அருமையில் எளிய அழகே போற்றி | 385, 441 |
| 8 | அருள்பாட்டின் அருளாற்றல் | 565 |
| 9 | அருள் வெளி | 529 |
| 10 | அருளுடைமை | 293 |
| 11 | அறநிறுவனங்களின் வருவாய் நிலை | 1 |
| 12 | ஆடும் பெருமான் அபிடேக நாட்கள் | 65 |
| 13 | ஆயுள் சத்தா அறிவிப்பு | 63 |
| 14 | ஆனந்தம் மலர்கிறது | 237 |
| 15 | ஆனந்த வருடப் பஞ்சாங்கம் | 275 |
| 16 | இந்தியக் குடியரசின் இருபெருந்தலைவர்கள் | 469 |
| 17 | இராமேசுவரத்தில் ஆடி அமாவாசை | 405 |
| 18 | இருவகை வியாபாரிகள் | 499 |
| 19 | இலங்கை திருக்கேதீச்சரம் பெருந்துறையா ? | 253 |
| 20 | உணர்தலும் உரைத்தலும் | 450 |
| 21 | உமாபதிசிவமும் சித்தாந்த நுட்பமும் | 17 |
| 22 | உலக நாடுகளில் மக்கள் தொகை | 34 |
| 23 | ஊர் புகலாமே | 231 |

| என் | | பக்க என் |
|---|---|---|
| 24 | எதிர்காலம் | 58, 125, 178, 225, 272, 322; 370, 412, 464, 511, 559, 606 |
| 25 | கடவுட் கொள்கையும் நல்லொழுக்கமும் | 229 |
| 26 | கடவுள்மாமுனிவர் காட்டும் சித்தாந்த நுட்பங்கள் | 156, 203 |
| 27 | கடவுளைக் காண | 220 |
| 28 | கடிதம் | 117, 173, 228, 284, 321, 363 |
| 29 | கல்வியின் பயன் | 77 |
| 30 | கரணி 4 | — |
| 31 | கவிதைக் கடிதம் | 484 |
| 32 | கும்பகோணத்தில் மாசி மகம் | 165 |
| 33 | குருஞானசம்பந்தர் போற்றிய தத்துவப் பிரகாசம் | 36 |
| 34 | குரு வழிபாடு | 432 |
| 35 | குரு நிந்தை கூடாது கூடாது | 281 |
| 36 | குறள் நோக்குப் கவி | 107 |
| 37 | குறியீடு | 281 |
| 38 | கேடாவரு நமன் | 193 |
| 39 | கோயில் மணி | 336, 401 |
| 40 | கோயில் நில உரிமை நிலை | 129 |
| 41 | கௌமாரம் | 16, 87 |
| 42 | சத்தாதாரர்களுக்கு அறிவிப்பு | 63, 128 |
| 43 | உலக நலங்கருதி ஸ்ரீ சரபமூர்த்திக்கு லட்சார்ச்சனை | 61 |
| 44 | சரப வேள்வியும் கோடியருச்சனையும் | 195, 339 |
| 45 | சாணத்தின் பெருமை | 59 |
| 46 | செய்திகள் | 57, 121, 174, 221, 265, 313, 364 408, 461; 508, 556, 602 |
| 47 | ஞானசம்பந்தம் | 4 |
| 48 | ஞானயோகம் | 594 |
| 49 | தங்கம் தங்கம்தான் | 542 |
| 50 | தமிழ்ச் சொற்களில் தத்துவம் | 581 |
| 51 | தமிழ் நாட்டில் சாக்தம் | 392, 437, 485 |
| 52 | தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாறு | 113 |
| 53 | தருமையில் இரு துர்க்கைகள் | 547 |
| 54 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய ஆசியுரை | 6, 69, 140, 187, 285, 329, 378, 425, 474, 521, 569 |

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 55 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளும் புத்தாண்டு அருள் ஆசி | 234 |
| 56 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு வாழ்த்து | 434 |
| 57 | தவம் | 78 |
| 58 | தாயிற்சிறந்த தயா | 533 |
| 59 | திருச்செந்தூர் விசாக விழா | 306 |
| 60 | திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு | 358 |
| 61 | திருபுவனம் ஸ்ரீ சரபமூர்த்திக்கு சரப வேள்வியும் கோடியர்ச்சனையும் | 339 |
| 62 | திருமூலர் காட்டும் பசுவிலக்கணம் | 245 |
| 63 | தீயவர்களைக் கண்டு பிடிப்பது எப்படி? | 238 |
| 64 | துன்பங்களும் துடைக்கும் வழியும் | 92, 152, 214 |
| 65 | தெய்வபக்தியும் தேசபக்தியும் | 373 |
| 66 | நெஞ்சுக்கு நீதி | 202 |
| 67 | நவராத்திரி விழா விளக்கம் | 504 |
| 68 | நவராத்திரி விழா | 520 |
| 69 | நவீனசித்தர் யூரி ஜெல்சர் | 177 |
| 70 | பழநியில் பங்குனி உத்தரம் | 217 |
| 71 | பார்வையாளர் குறிப்பு நகல் | 35, 39, 60, 75, 79, 79, 106, 109, 127, 160, 168, 224, 250, 260, 300, 320, 335, 357, 391, 419, 420, 431, 536, 585 |
| 72 | பிரதோஷ விரதம் | 208, 249 |
| 73 | பிறப்பு நீங்க வழி | 414 |
| 74 | புத்தக விலைப் பட்டியல் | 415 |
| 75 | புதிய சோதி | 479 |
| 76 | பூசத்துறை | 118 |
| 77 | பெண்களுக்கு அறிவுரை | 53 |
| 78 | பெருஞ்சாந்தி காண்போம் | 325 |
| 79 | பொங்கல் வாழ்க! | 76 |
| 80 | மகாசிவராத்திரி வரலாறு | 169 |
| 81 | மண் சுமந்த மதுரை | 458 |
| 82 | மணிவாசகரும் திருத்தில்லையும் | 45 |

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 83 | மதிப்புரை | 55, 276 |
| 84 | மதுரையில் சித்திரைத் திருவிழா | 257 |
| 85 | மருகலான் அடி | 334 |
| 86 | மருவிய கருணை மலையே போற்றி | 494 |
| 87 | மாயூரத்தில் துலா மாதம் | 591 |
| 88 | மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய உரைச்சுருக்கம் | 506 |
| 89 | வாழ்வும் சமயமும் | 110 |
| 90 | வாழ்வு வளம்பெற | 181 |
| 91 | வேளாண்மை வெற்றிபெற | 517 |
| 92 | வைத்தீஸ்வரன்கோயில் மண்டலாபிஷேகக் கார்த்திகை | 354 |
| 93 | ஜனன மரண இயல் பிறப்பும் இறப்பும் | 40 |
| 94 | ஸ்ரீ ஞானாம்பிகை உடனுறை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ் | i |


## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

### திருவாசக வகுப்பு :

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில், 1, 4, 8, 22, 25—11—74 ஆகிய நாட்களில் மாலை, தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திரு ந. ரா. முருகவேள் M. A., M. O. L., அவர்களால் திருவாசக வகுப்பு நடத்தப்பட்டது. வகுப்பில் சுமார் 25 பேருக்கு மேல் கலந்துகொண்டு பயன் பெறுகின்றனர்.

### நாயன்மார்கள் குருபூஜை விழா :

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் சைவ சமய அறுபத்துமூன்று நாயன்மார்களில் 6—11—74 அன்று சத்தியநாயனார், 15—11—74 அன்று பூசலார் நாயனார், 18—11—74 அன்று சிறப்புலி நாயனார், 29—11—74 அன்று கணம்புல்ல நாயனார் ஆகிய நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள் கொண்டாடப்பெற்றன. குருபூஜை விழா நாட்களில் சைவப்புலவர், திரு. மாசிலாமணி முதலியார் அவர்களால் பெரியபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. விழாவிற்கு வந்திருந்தோர் யாவர்க்கும் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன.